விலை: 60.00
பக்கங்கள் : 20

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 25
ஒலி 306 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 03 ஞாயிற்றுக்கிழமை (20.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







### யாழ்.மாவட்ட செயலகத்தில்

## தேர்தல் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தொடர்பில் பொலிஸாருடன் கலந்துரையாடல்



19

### வெடிகுண்டு எச்சரிக்கை

## இந்திய விமானம் மீது கட்டுநாயக்கவில் சோதனை

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெடி குண்டு அச்சுறுத்தல் காரண மாக இந்திய விமானமொன்று விசேட சோதனைக்கு உட் படுத்தப்பட்டதாகப் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மும்பையிலிருந்து நேற்றுப் பிற்பகல் 3 19

## முழங்காவிலில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

(கிளிநொச்சி)

முழங்காவிலில் இடம்பெற்ற மோட்டார் சைக் கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

இதில் பூநகரியைச் சேர்ந்த பஞ்சாட்சரம் மௌதீஸ்வரன் (வயது-45) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த 11ஆம் திகதி வேரவிலில் இருந்து முழங்காவில் நோக்கி மோட்டார் 19

# 400 ஊழல் கோப்புக்கள் அரசாங்கத்திடம் உள்ளன

### அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் - ஜனாதிபதி அநுர



(மாத்தறை)

ஊழல் மற்றும் மோசடி தொடர்பான 400 ஆவணக் கோப்புகள் அர சாங்கத்திடம் உள்ளன. அனைத்தும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத் தப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் வாள்வெட்டு

### ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் இடம்பெற்ற வாள்வெட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சுன்னாகம் சந்தைப் பகுதியில் 19

### நாட்டைக் கட்டியெழுப்ப

## ஜனாதிபதி அநுரவுடன் கைகோர்க்க முடியும் - சஜித்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர் தலை வெற்றிகரமாக எதிர் கொண்டு நாட்டைக் கட்டியெ ழுப்ப ஜனாதிபதி யுடன் கைகோர்க்க 19

## அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து அவதானம்

### ஜனாதிபதி அநுர குமார

(தங்காலை)

2025 பெப்ரவரியில் கொண்டு வரப்படும் வரவு செலவுத் திட் டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து அவதானம் செலுத்தப் படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 19

## ரூ.400 பில்லியன்களுக்கு மேல் அநுர அரசு கடன் பெற்றுள்ளது



### முன்னாள் எம்.பி ஹர்ஷ டி சில்வா

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் கடந்த சில வாரங் களில் 400 பில்லியன் ரூபாய்க்கு மேல் கடன் பெற்றுள்ள தாக முன்னாள் 19

## தேர்தல் இதுவரை
# 343
## முறைப்பாடுகள்

19ஆம் பக்கம் பார்க்க


வெளிநாடுகளுக்கான
பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும்
மிகக் குறைந்த கட்டணம்
11 kg மேற்பட்ட பொதிகளுக்கு
UK 1300/= France 2300/=
Germany 2100/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
TCN Express
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம். 208, Galle Road, Colombo 06.
(452) T.P - 077 755 4528

வட இந்திய தலயாத்திரை

- காசி
- விஷ்ணு கயா
- அயோத்தியா
- சீரடி சாயிபாபா
- புத்த கயா
- திரிவேணி சங்கமம்

12 நாட்கள்

கட்டணத்தில் உள்ளடங்குபவை

- ☑ இந்திய e விசா
- ☑ சர்வதேச விமானப் பயணச்சீட்டு
- ☑ 3 உள்நாட்டு விமானப் பயணச்சீட்டு
- ☑ குளிரூட்டப்பட்ட வாகனம்
- ☑ மூன்று வேளை உயர்தர சைவ உணவு
- ☑ தேநீர் / பழச்சாறு
- ☑ குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- ☑ நுழைவுக்கட்டணம் (சிறப்புத் தரிசனம்)
- ☑ தமிழ் சுற்றுலா வழிகாட்டி
- ☑ சுற்றுலா மேலாளர்
- ☑ நினைவு பரிசில்

(2356)


தொடர்புகளுக்கு:- 077 711 4828
BOHAR TRAVELS BOHAR INTERNATIONAL (PVT) LTD
510, பருத்தித்துறை வீதி, நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது என்றும் காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 - 02 - 1940 | 17 - 10 - 2024 |



## திரு.நாகலிங்கம் ஏகாம்பரநாதன்

(முன்னாள் உத்தியோகத்தர் குடிவரவு குடியகல்வு திணைக்களம், பிரதேச செயலகம் வேலணை, உதவி அரசாங்க அதிபர் பணிமனை நெடுந்தீவு, பிரதம எழுதுவினைஞர் மாவட்டச் செயலகம், கிளிநொச்சி)

நயினாதீவு 05ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கலாசாலைவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் ஏகாம்பரநாதன் அவர்கள் 17.10.2024 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்) - அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான குலசேகரம்(ஓய்வு நிலை அதிபர்) - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு சிரேஸ்ட மருமகனும் செல்வமலர் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுதமதி, சங்கர்(Swiss), மற்றும் யோகர்(London), சேகர்(Canada), சுதாகர் (JICA- Project Coordinator) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அருள்விழி சங்கர், யசோதரா சேகர், லோகினி சுதாகர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சௌமியா, சாயிதன் பிரபா, ஆர்த்தனா(யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஞானமலர்(France), வசந்தமலர்(Germany) ஆகியோரின் அன்பு மைத்துனரும் இரத்தினசிங்கம், விஜயகுமார் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (20.10.2024) இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் திருநெல்வேலி கலாசாலை வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உம் ஒழுங்கை, கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(2355)

தகவல்:
குடும்பத்தினர்


## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306

(2337)



## காணி விற்பனைக்கு உண்டு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு அண்மையாக கோப்பாய் மகா வித்தியாலயத்திற்கு பின்புறமாக 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

- நல்ல குடியிருப்புச் சூழல்
- நல்ல தண்ணீர்க் கிணறு
- இருபாலை கோண்டாவில் வீதி 100m

உரிமையாளர் தொடர்புகட்கு
077 993 4113
077 349 9465

(2362)


## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

தாவடி வேத விநாயகர் விளையாட்டுக் கழகத்தால் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் வாணி விழாவும் பரிசளிப்பு விழாவும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-7)


## காணி விற்பனைக்கு

J/62 வளன்புரம் வடக்கில் நில.பர 1 குழி 9. உறுதிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகட்கு :
077 602 1799
075 059 2644

(2360)



## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு :
077 262 6944

(2365)







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# தெற்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் வடக்கு மக்களிடமும் தென்படுகின்றது

## ஆளுமை மிக்க புதியவர்களே தமிழ் மக்களின் தெரிவு- சிற்பரன்

(யாழ்ப்பாணம்)

தெற்கில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் இப்போது வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மத்தியிலும் தென்படுகின்றது. பழையவர்களைக் களைந்து முற்போக்கான, ஆளுமை மிக்க இளைஞர்களே இனிவரும் காலத்துக்கான தமிழர் அரசியலை முன்கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ண ஓட்டம் தமிழ் மக்களிடம் மேலோங்கி காணப்படுகின்றமை நல்ல அரசியல் மாற்றத்துக்கான அடித்தளமாக நோக்கப்பட வேண்டும்.

வடமராட்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னத்தில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் தவச்செல்வம் சிற்பரன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாட்டில் உருவாகியிருக்கும் மாற்றம் பழைய கட்சிகளும் சித்தாந்தங்களும் காலாவதியாவதற்கான தருணம். தெற்கில் ஐக்கிய தேசியக்கட்சி, சுதந்திரக் கட்சி உட்பட பாரம்பரியக் கட்சிகள் இருந்த இடம்தெரியாமல் அழிந்து போயிருக்கின்றன.

புதிய முற்போக்குச் சிந்தனையும் ஆளுமையும் மிக்கோரை கொண்டு மக்கள் நலன்சார்ந்து செயற்படும் கட்சிகளே தமிழ் மக்களின் காலத்தின் தேவையாக எழுந்திருக்கின்றது. அதற்கான முற்சமிக்ஞைகள் வடக்கு மக்கள் மத்தியில் தென்பட ஆரம்பித்திருக்கின்றது.

எப்படி உதயசூரியன் சின்னம் அடையாளம் தெரியாமல் தொலைந்துபோனதோ அதே நிலையே இன்று மூப்படைந்த தமிழரசுக் கட்சிக்கும் ஏற்பட்டுள்ளது. தலைமையில்லாத தமிழரசுக் கட்சி இன்று தமக்குள்ளேயே மோதுண்டு, நீதிமன்றப் படி ஏறியுள்ளது. இதேநிலை தான் வடக்கிலுள்ள ஏனைய மூப்படைந்த கட்சிகளுக்கும்.

அதேநேரம் காலாவதி என்பது கட்சிகளுக்கு மட்டுமல்ல. உறுப்பினர்களுக்கும் தான். தகுதிவாய்ந்த முற்போக்குச் சிந்தனையுள்ள இளைஞர்களே இனிவரும் காலத்துக்கான தமிழ் அரசியலை முற்கொண்டு செல்ல வேண்டும்.

இவ்வாறான நிலையில் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் எமது தமிழ் மக்கள் கூட்டணியால் முன்மொழியப்பட்ட வேட்பாளர்கள் வேறு எந்தக் கட்சியிலும் இல்லாத அளவில், பல்துறைசார்ந்த முற்போக்குச் சிந்தனையுள்ள இளைஞர்கள். அந்தவகையில் வடக்கில் மாற்றத்தை எதிர்பார்க்கும் மக்களின் சிறந்த தெரிவாக எமது வேட்பாளர்களே இருக்க முடியும் எனத் தெரிவித்தார். (நி-8)

# மாற்றம் என்பது

## தெற்கிலிருந்து வருவதில்லை

### யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

**எமக்குள்ளான அகவயமான முற்போக்கு மாற்றமே உண்மையான மாற்றம் என்பது தென்னிலங்கையிலிருந்து வருவதில்லை என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு கருத்துத் தெரிவித்தனர். சிங்கள - பௌத்த பேரினவாதம் முழுவீச்சில் செயற்படுவதற்கான வாய்ப்புக்களைப் பொருளாதார நெருக்கடி தற்காலிகமாக மட்டுப்படுத்தியுள்ள நிலையில் சிங்கள மக்கள் மாற்றமொன்றினை எதிர்பார்த்து வாக்களித்துள்ளனர். எனினும் சிங்கள மக்களின் வாக்களிப்பு முறைக்கு நேர்மாறாக வாக்களித்ததன் மூலம் எம்மிடையே நிலவுவது பொருளாதார நெருக்கடி மட்டுமல்ல என்பதை தமிழ் மக்கள் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.

15 ஆண்டுகளாக தலைமைத்துவ வெற்றிடம் நிலவும் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தெற்கில் ஏற்பட்டுள்ள ஊழலற்ற ஆட்சி, இளையோர்களின் அரசியற் பங்கேற்பு உள்ளிட்டவைகளின் தாக்கம் உணரப்படாமலுமில்லை. தமிழ்த் தேசிய சித்தாந்தத்தை சமூக, பொருண்மிய, பண்பாட்டுத் தளங்களில் மக்களுக்கானதாகக்கொண்டு போய்ச்சேர்ப்பதில் எந்த முனைப்பையும் காட்டாத தமிழ்த் தேசிய, முலாம் பூசிய அரசியல் வாதிகள் அரசியற் கட்சிகள் மீதான பெரும் அதிருப்தி வெகுவாக மக்கள் மத்தியில் உணரப்பட்டு வருகின்றது.

தென்னிலங்கையில் அரசியல் மாற்றத்தால் ஏற்பட்ட அலையில் தமிழ் மக்களிடையே குறிப்பாக இளையோர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த கரிசனை, தமிழ்த் தேசிய அரசியற் பரப்பில் தவிர்த்துப் புறமொதுக்க முடியாதவொன்றாகும்.

தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கும், அரசியற்பண்பாட்டிற்கும் முற்றிலும் எதிரான அரசியலை முன்னெடுத்த தமிழ்த் தேசியப் போலிகளை இந்த மண்ணிலிருந்து துடைத் தெறிந்து புதிய தமிழ்த் தேசிய அரசியற் பண்பாட்டை தோற்றுவிப்பதே உண்மையான மாற்ற மாகும்.

மாறாக ஊழல் எதிர்ப்பு, கவர்ச்சி அரசியலினால் தென்னிலங்கைத் தரப்புக்களை தமிழ் அரசியலிற்கு மாற்றாக முன்னிறுத்துவது அரசியல் தற்கொலைக்குச் சமமாகும். தென்னிலங்கையின் கவர்ச்சி அரசியலினால் வடக்கு - கிழக்கில் நடைபெறும் தொடர் ஆக்கிரமிப்புக்கள் மழுங்கடிக்கப்படுவதும் அதன் மூலம் தென்னிலங்கைத் தரப்புக்களிற்கும், அரசியல் வேலைத் திட்டங்கள் ஏதுமின்றிய சுயேட்சைகளிற்கு வாக்களிப்பதும் தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கான பயணத்தை சீர்குலைக்கும் ஒன்றாகும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (நி-8)

# ரணில்,மஹிந்தவின் வாகனங்களை கோரும் அரசு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் பயன்படுத்திய மேலதிக அரசாங்க வாகனங்களை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த வாகனங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்குமாறு பல தடவைகள் அறிவிக்கப்பட்ட போதிலும் நேற்று முன்தினம் வரை அவை கையளிக்கப்படவில்லை என உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் ஓய்வு பெற்ற பின்னர் 3 அரச வாகனங்களை மாத்திரம் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ளது. ஆனால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 அரச வாகனங்களையும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 15 அரசாங்க வாகனங்களையும் பயன்படுத்து [illegible]




Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்


# தேசிய மட்ட

# கோலூன்றிப் பாய்தல் போட்டி

# யாழிற்கு 2 தங்கம், 1 வெண்கலம்

அகில இலங்கை பாட சாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகததாஸ மைதானத்தில் நடை பெற்று வருகின்றன.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப்பாய்தல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியை பிரதி நிதித்துவம் செய்த ச.துசாந்தன் 4.30 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான



கோலூன்றிப்பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த செ.நிருஷிகா



3 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கம் மற்றும் அதே கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சி.டிலக்சிகா 2.70 மீற்றர்



பாய்ந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## டெல்லி அணியின் பயிற்சியாளராக ஹேமங் பதானி நியமனம்

டெல்லி அணியின் புதிய பயிற்சியாளராக இந்திய அணியின் முன்னாள் வீரரும் தமிழகத்தை சேர்ந்தவருமான ஹேமங் பதானி நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இந்திய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் முனாப் பட்டேலை பந்து வீச்சு பயிற்சியாளர் பணிக்கு கொண்டு வரவும் அந்த அணி திட்டமிட்டுள்ளது.

மெகா ஏலம் தொடங்குவதற்கு முன்பாக அனைத்து அணிகளும் பயிற்சியாளர்களை நியமித்து வரு கிறது. அந்த வகையில் டெல்லி கேபிட்டல்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ரிக்கி பாண்டிங் நீக்கப் பட்டதை தொடர்ந்து புதிய பயிற்சியாளர் தேடும் பணியில் அந்த அணி நிர்வாகம் தீவிரமாக ஆலோசித்த நிலையில் குறித்த அறிவிப்பினை வெளியிட்டு இருந்தது. இன்னொரு பக்கம் ஐ.பி.எல். கிரிக் கெட்டில் யார்-யாரை தக்க வைக்கலாம் என்பதிலும் டெல்லி நிர்வாகம் கவனம் செலுத்தி வரு கிறது. கப்டன் ரிஷப் பண்ட் (ரூ.18 கோடி), ஓல்- ரவுண்டர் அக்ஷர் பட்டேல் (ரூ.14 கோடி), இடக்கை சுழற் பந்து வீச்சாளர் குல்தீப் யாதவ் (ரூ.11 கோடி) ஆகியோர் உறுதியாக தக்கவைக் கப்படு வார்கள் என்று தெரிகிறது. ஜாக் பிரேசெர் மெக்குர்க், டிரிஸ்டான் ஸ்டப் சையும் குறி வைத்துள்ளது. (6-8)


## விற்பனைக்கு

01. யாழ்.மின்சார நிலைய வீதியில் 01ம் ஒழுங்கையில் 01 பரப்பும் 05 குழியும் கொண்ட சுற்று மதிலுடன் கூடிய காணியும்
02. யாழ்.ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் 6 பரப்புக் காணியும் வீடும்.
03. யாழ். பிறவுண் வீதியில் பிறவுண் வீதி முகப்புடன் 2 பரப்புக் காணியும்
04. யாழ்.பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 100 அடி அகலமும் 170 அடி நீளமும் கொண்ட 4 பரப்பும் 15 குழியும் கொண்ட காணியும்
05. யாழ். திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் மரக்கறிச் சந்தைக்கு அண்மையில் 11/2 பரப்பில் அமைந்த காணியுடன் கூடிய வீடும்
06. யாழ். நீதிமன்றத்திற்கு முன்பாக 2 பரப்பும் 2 குழியும் கொண்ட காணியும்
07. யாழ். மின்சார நிலைய வீதியில் பேருந்து தரிப்பிடத்திற்கு பின்பாக 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக்கடையும்
08. யாழ். மின்சார நிலைய வீதியில் பேருந்து தரிப்பிடத்திற்கு பின்பாக 100 அடி அகலமும் 120 அடி நீளமும் கொண்ட 3 பரப்பும் 3 குழியும் கொண்ட காணியும்
09. யாழ்.வைத்தியசாலை வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக 06 பரப்புக் காணியும்
10. யாழ். காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அண்மையில் 06 ஏக்கர் காணியும்
11. யாழ். மானிப்பாய் வீதியில் 05 பரப்புக் காணியும்
12. யாழ். விக்ரோரியா வீதியில் 12 பரப்பும் 16பரப்பும் கொண்ட இரண்டு காணிகளும் உடன் விற்பனைக்குண்டு.

(C-1422)

077 723 2535


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 160 | 200 | 150 | 200-250 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 200-250 | 500 |
| தக்காளி | 320 | 280 | 400 | 290 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 180 | 150-200 | 200 |
| கோவா | 230 | 300 | 250 | 300 | 300 |
| கரட் | 150 | 200 | 200 | 280 | 240 |
| பூசணி | 80 | 60 | 80 | 60 | 100 |
| புடோல் | 80 | 180 | 80 | 200 | 300 |
| வாழைக்காய் | 180 | 120 | 130 | 80-100 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 350 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 200 | 250 | 280 | 350 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 400 | 600 |
| வெண்டக்காய் | 160 | 200 | 150 | 130 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 180 | 160 | 120 | 200 |
| பயற்றங்காய் | 450 | 400 | 250 | 400-500 | 400 |
| லீக்ஸ் | 200 | 300 | 250 | 350 | 320 |
| பீற்றூட் | 140 | 120 | 150 | 130 | 200 |
| கறிமிளகாய் | 600 | 450 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 350 | 250 | 200 | 100-170 | 200 |
| போஞ்சி | 480 | 500 | 450 | 320 | 600 |
| கத்தரிதம்புள்ள | 130 | 100 | 150 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 70 | 60 | 120 |
| தேசிக்காய் | 600 | 350 | 400 | 400-450 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 130 | 90-155 | 120-170 |
| இராசவள்ளி | -- | 900 | 1500 | 550 | 1200 |
| வெங்காயப்பூ | -- | 450 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 100 | 130 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 100 | 80 |
| [illegible] | 60 | 35 | 80 | 180 | 80 |
| [illegible] | -- | 100 | 100 | -- | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்கள் தொடர்பில் கடுமையாகும் சட்டம்

## தேர்தல் ஆணைக்குழு அதிரடி

(கொழும்பு)

**பொதுத் தேர்தல் தொடர்பாக சமூக ஊடகங்களில் தரமற்ற அல்லது போலி யான ஆய்வு அறிக்கைகள், கருத்துக் கணிப்புகள் போன்ற தகவல்களை வெளியிட்டால் சட்டநடவடிக்கை எடுக் கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

கட்சி அல்லது வேட்பாளர்கள் முறை கேடாகப் பதவி உயர்வு அல்லது பாரபட்சம் காட்டினால், அந்த நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

நபர் ஒருவர் குற்றவாளியாக உறுதி செய்யப்பட்டால் ஒரு லட்சம் ரூபாய் அபராதம் அல்லது 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.கே. ரத்நாயக்க தெரிவிக்கையில்,

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்டப் பிரிவு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, தேர்தல் சட்டத்தை மீறியமை கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்படும்.

சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு தேர்தல் ஆணையத்தில் தனிப் பிரிவு நடைமுறைப்படுத்தப்படும் என சுட்டிக்காட்டிய அவர், தேர்தல் கண்காணிப்பு குழுக்களும் தகவல்களை வழங்குவார்கள் என குறிப்பிட்டுள்ளார்.

அந்தத் தகவல்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்தின் சமூக ஊடக ஒழுங்குமுறை குழு செயற்படுத்தப்பட்டுள்ளது. சமூக ஊடகங்கள், விசேடமாக ரிக்ரொக் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவை தொடர்பில் தேர்தல் ஆணையம் அதிக கவனம் செலுத்தியுள்ளது.

மேலும் அரசியல் கட்சி அல்லது வேட்பாளரை விளம்பரப்படுத்த அல்லது பாரபட்சம் காட்டுவதற்காக, அரச ஊழியர்கள் தங்கள் தனிப்பட்ட சமூக ஊடகக் கணக்கு அல்லது வேறு ஏதேனும் கணக்கை பயன்படுத்துவதும் தேர்தல் சட்டத்தை மீறுவதாகக் கருதப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)


நேர்மையான வினைத்திறன்மிக்க அரசியலுக்கு! இளைஞர்களின் வருகையை ஆதரிப்போம்!

**எதிர்வரும் 2 ஆண்டுகளுக்கான செயல் திட்டம்**

1. எமது தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான கட்டமைப்பினை உருவாக்குதல்.

2. யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் 6 பாராளுமன்ற பிரதிநிதிகளுக்கிடையில், எவ்வித கட்சி வேறுபாடுமின்றி, ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்தி, அரசியல் தீர்வு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான பொதுத் தீர்மானத்தை நிறைவேற்றுதல்.

3. இளைஞர் இருப்பை தக்கவைத்து கொள்ளும் நடவடிக்கைகள்!
   - வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்.
     உதாரணம்: வீட்டுத் திட்டங்களுக்கு அருகிலுள்ள பிரதேசங்களில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் முதலீட்டு திட்டங்களை செயல்படுத்துதல்.
   - கல்வி, விளையாட்டு மற்றும் கலைகளில் இளைஞர்களின் ஈடுபாட்டை ஊக்குவித்து, போதைப்பொருள் மற்றும் வன்முறை இல்லாத சமுதாயத்தை உருவாக்குதல்.

4. அறிவோம் ஆழ்வோம் செயல் திட்டம்
   - அரசியல் மற்றும் பொருளாதாரத்திற்கான பயிற்சி பட்டறைகளை உருவாக்கி, கிராமம் முதல் நகரம் வரை விழிப்புணர்வை மேம்படுத்துதல்.
   - இதற்கான ஆக்கமும் ஊக்கமும் வழங்குவதன் மூலம், சிறந்த ஒரு தலைமுறையை உருவாக்குதல்.

5. போக்குவரத்து மேம்பாட்டு திட்டம்
   - பாதசாரிகள் மற்றும் மோட்டார் வாகன பயணிகள் நலன் கருதி, தார் வீதிகளில் காணப்படும் தூசு துகள்களை சுத்திகரிக்கும் இயந்திர கொள்வனவு.
   - போக்குவரத்து சமிக்ஞை விளக்குகளில் சிசிடிவி (CCTV) பொருத்துதல், சீரான போக்குவரத்து முறையினை கடைப்பிடிக்காதவர்களை கட்டுப்படுத்தல், சாலை விபத்துகள், குற்றங்களை பதிவு செய்து, பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தல்.

**இது எமது 2 வருட செயல் திட்டமாகும்; எமது 5 மற்றும் 30 வருடகால செயல் திட்டங்கள் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடப்படும்!**

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
பாராளுமன்ற தேர்தல் 2024

ஊஞ்சல் சின்னம்



4

சுயேச்சைக் குழு - 2

E.S.P நாகரத்தினம் கமலருபன்
சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்
LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

மாற்றத்திற்கான நம்பிக்கை...



களத்தில் கமல்
2024 எமக்கான நேரம்

(005)



**ஊர்க்கோழிக் குஞ்சு விற்பனைக்கு**

ஒரு நாள் ஊர்கோழிக் குஞ்சுகளை தினமும் பெற்றுக் கொள்ளலாம். (450)

077 3322 433



**காணி தேவை**

யாழ். நகரை அண்டிய பிரதான வீதியை முகப்பாக கொண்ட 2 பரப்புக்குட்பட்ட காணி விலைக்கு தேவை. (450)

077 317 9515



**பணியாளர் தேவை**

புத்தகசாலை ஒன்றிற்கு பெண் பணியாளர் தேவை

- நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
- கணனி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு
077 895 5378/ 076 556 0222 (2357)


# இராசிபலன்

20.10.2024
ஐப்பசி 03, ஞாயிற்றுக்கிழமை
திருதியை முற்பகல் 11.18 மணிவரை
கார்த்திகை பிற்பகல் 1.29 மணிவரை

சுபநேரம் -9.02-10.32 மணிவரை
இராகுகாலம் -4.32-6.02 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்.
அத்தம் , சித்திரை.

வளவன்



**மேஷம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.



**கடகம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.



**துலாம்** ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்.



**மகரம்** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.



**ரிஷபம்** கனிவாகப் பேசி காரியங்களைச் சாதித்து கொள்வீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பெருமைகள் வந்துசேர கணபதியை வழிபட வேண்டிய நாள்.



**சிம்மம்** கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள்.



**விருச்சிகம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



**கும்பம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் நன்மையுண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.



**மிதுனம்** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப விரயங்களில் தாராளம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களை நிறைவு செய்ய அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள்.



**கன்னி** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



**தனுசு** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், தேவைகள் பூர்த்தியாகும்.



**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்கொன்ற நெஞ்சம் திறன்கெட்டு அழியும்.

# மக்களின் ஆரோக்கியத்தில் கேடு விளைவிக்காதே!

## அச்சுவேலியில் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் இரத்தப் பரிசோதகரை மாற்றுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்து இருந்தனர்.

வைத்தியசாலையில் புதிதாக ஆய்வுகூடத்தில் இரத்த பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் குறித்த பரிசோதகரை தெல்லிப்பழைக்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த வெற்றிடத்திற்கு புதிதாக ஒருவரை நியமிப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு மேலாகும் என கூறப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியசாலையில் டெங்கு பரிசோதனை, மலேரியா பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் அதிகம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மாற்றப்படும் பரிசோதகருக்கு மாற்றீடாக எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் இரத்த மாதிரிகளை வேறு இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் அல்லது நோயாளர்கள் பணம் கொடுத்து வேறு இடங்களில் பரிசோதனை செய்ய வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

எங்களின் கோரிக்கைக்கு உடனடித் தீர்வை வழங்கு, இரத்த பரிசோதகரை மாற்றம் செய்யாதே, மக்களின் ஆரோக்கியத்தில் கேடு விளைவிக்காதே போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டு இருந்தனர். (6-8-33)

# கம்போடியாவில் இடம்பெற்ற மணப்பெண் அலங்கார போட்டி

## யாழிற்கு 3ஆம் இடம்




(யாழ்ப்பாணம்)

கம்போடியா நாட்டில் நடைபெற்ற மணப்பெண் அலங்காரப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனித்தா விநயகாந்தன் 3 ஆவது இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

APHCA Cambodia Hair, Make up & Beauty Olympics 2024 போட்டிகள் இந்த ஆண்டும் கம்போடியாவில் கடந்த 15, 16 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

மணப்பெண் அலங்காரப் போட்டியில் யாழ்.தெல்லிப்பழையைச் சேர்ந்த அனித்தா விநயகாந்தன் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இப்போட்டியில் 19 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் இலங்கையில் இருந்து முதல்முறையாக 7 தமிழ் போட்டியாளர்கள் பங்கு பற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# யாழ்.பல்கலைக்கழகத்தில்

## சமய ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பொன்விழா கொண்டாட்ட நிகழ்வுகளின் ஓர் அங்கமாக கிறிஸ்தவ நாகரீகத்துறை, யாழ். மாவட்ட மறைக்கல்வி நிலையம் இணைந்து நடத்தும் சமய ஆசிரியர்களுக்கான 'பின் நவீனத்துவ சமுதாயப் பின்னணியில் மறைக்கல்வி' எனும் மையப்பொருளிலான கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

கிறிஸ்தவ நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் அருட்திரு.போல் றொகான் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர்அருட்திரு எஸ்.டியூக் வின்சன்ற் செயலாற்றுவதுடன் வளவாளர்களாக ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாகசேவை சிரேஷ்ட அதிகாரி இக்னேஷியஸ் செல்வின், யாழ்.பல்கலைக் கல்வித்துறை தலைவர் கலாநிதி ஏ.நித்லவர்ணன், யாழ்.பல்கலைக் கல்வித்துறை பேராசிரியர் திருமதி ஜெ.இராசநாயகம், ஆசிரிய ஆலோசகர் ஜோன்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (நி-8)

# மின்கம்பத்துடன் மோதிய கார்



(கரணவாய்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்து நேற்று முன்தினம் மாலை வல்லை மண்டான் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

எனினும் இவ்விபத்தில் தெய்வாதீனமாக எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (6-8-60)

# உற்சவகால அதிஷ்ட

## சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்க வளர்ச்சிநிதிக்காக உற்சவ கால அதிஷ்ட இலாபச் சீட்டிழுப்பு கடந்த 15 ஆம் திகதி விழிப்புலனற்றோர் சங்க அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் 11399 இலக்கத்திற்கு 1 ஆம் பரிசாக தொலைக்காட்சியும், 00438 இலக்கத்திற்கு 2 ஆம் பரிசாக காஸ் குக்கரும்-லிற்றோ சிலிண்டரும், 35185 இலக்கத்திற்கு மின்விசிறியும் கிடைக்கப் பெற்றுள்ளது.

வெற்றியாளர்கள் உங்கள் பரிசுகளை எதிர்வரும் 30.11.2024 இற்கு முன்பதாக அலுவலக தினங்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையுள்ள நேரத்துக்குள் தங்களது அதிஷ்ட சீட்டுக்களை கொண்டு வந்து உறுதிப்படுத்தி பரிசுகளை பெற்றுக் கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# வெளிவரவுள்ள 'ஆரகன்'

## கதாநாயகியாக இலங்கை பெண்

(யாழ்ப்பாணம்)




'ஆரகன்' எனும் தென்னிந்திய முழு நீளத்திரைப் படம் இம்மாத இறுதியில் இலங்கையில் வெளியிடப் படவுள்ளது.

ஹரிகரன் பஞ்சலிங்கம், வரகுணன் பஞ்சலிங்கம் மற்றும் மதுரதன் பஞ்சலிங்கம் ஆகிய சகோதரர்களின் (Trending Arts Productions) தயாரிப்பில் உருவான இத்திரைப்படம் (Fantasy Thriller) திரைப் படமாக அமைந்துள்ளது.

தென்னிந்தியாவைச் சேர்ந்த மைக்கல் தங்கதுரை கதாநாயகனாகவும் இலங்கையைச் சேர்ந்த கவிப்பிரியா கதாநாயகியாகவும் இத்திரைப்படத்தில் நடித்துள்ளனர்.

அருண் kr இயக்கத்திலும் ஜஸ்வந்த் மற்றும் விவேக் ஆகியோரின் இசையமைப்பிலும் சூர்யாவின் ஒளிப்பதிவிலும் சசி தக்ஷாவின் படத்தொகுப்பிலும் உருவான இத்திரைப்படம் கடந்த 4 ஆம் திகதி இந்தியாவில் வெளியாகி ரசிகர்களின் பெருவரவேற்பை பெற்றது.

பல இலங்கை ரசிகர்களின் வேண்டுகோளிற்கிணங்க இம்மாத இறுதியில் இலங்கை திரையரங்குகளில் வெளிவர உள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# பேருந்து சாரதி மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கண்டியில் இருந்து யாழ். நோக்கி வந்த இ.போ.ச. பேருந்து ஒன்றினை இடைமறித்த இருவர் பேருந்தின் சாரதி மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பித்து சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வவுனியாவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த சாரதி, பேருந்தினை பயணிகளுடன் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று முறையிட்டார்.

அதன்பின்னர் சாரதி, வவுனியா வைத்தியசாலை சென்று அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-8)

# இலவச சிகிச்சை நிலையம் இணுவிலில் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளையும் அபயம் அறக்கட்டளையும் இணைந்து இலவச மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்றினை நேற்று இணுவிலில் திறந்து வைத்தனர்.

இவ்விழாவில் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், அபயம் அறக்கட்டளைத் தலைவர், வைத்திய நிபுணர் கந்தப்பிள்ளை பார்த்திபன், தொழிலதிபர் வி.யோகநாதன் (லண்டன்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த இல்லம் அமரர். முதலியார் செல்லத்துரை கனகசபாபதி ஆனந்தராஜா நினைவாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 464
Viber 076 636 3378



# சோறா? சுதந்திரமா?
## தமிழ் மக்களின் தேவை எது?

அடிமைச் சந்தைகளில் விற்கப்பட்ட கறுப்பினத்தின் ஒருவன் அமெரிக்கா தேசத்தின் ஜனாதிபதியாகி இந்த உலகை ஆழ்வான் என்று அந்த இனம் கனவிலும் நினைத்திருக்காது.

காலச் சுழற்சி. எந்த இனம் அடிமைகளை விற்பனை செய்யக் கூடிய சந்தைகளில் பொருட்களை ஏலமிடுவது போல மனிதர்களை ஏலமிட்டு விற்கப்பட்டனரோ அதே கறுப்பினத்து இளைஞன் ஒருவன் தனது இனத்தின் அடிமைச் சங்கிலியை உடைத்துக் கொண்டு அமெரிக்க ஜனாதிபதியாகி உலக வரலாற்றில் தன் பெயரை பொன்னெழுத்துக்களால் பொறித்துக் கொண்டான்.

ஆம்; அவன்தான் அமெரிக்காவின் 44 ஆவது ஜனாதிபதி பராக் ஒபாமா.

வாழ்க்கை வட்ட சுழற்சியில் இது போன்ற அதிசயங்கள் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும். இதில் என்ன வேடிக்கை எனின் சிலது மிக

> “தமிழினத்திற்கான அரசியல் தீர்வு, இறுதி யுத்தத்தில் நடைபெற்ற போர்க்குற்ற மீறல்களுக்கான நீதியான விசாரணை என்பவற்றையே தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். இவ்வேளை தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை என்று கூறுவது தமிழர் பிரச்சினையை திசை திருப்பும் செயலே.

விரைவாகவும் சிலது சற்றுப் தாமதமாகவும் நடந்தேறும்.

மேற்குறித்த கதைக்கும் இலங்கைத் திருநாட்டுக்கும் சம்பந்தம் உண்டு. இந்த நாட்டில் சிறுபாண்மை இனமாக இருக்கும் ஒரே காரணத்தினால் தமிழினம் பட்ட, பட்டுக் கொண்டிருக்கின்ற துன்ப, துயரங்கள் ஒன்றல்ல இரண்டல்ல.

காலம் காலமாக ஆட்சிபீடம் ஏறும் பெரும்பாண்மை ஆட்சியாளர்களின் பொழுதுபோக்கு அம்சமாக சிறுபாண்மை இனத்தை வதைக்கும் செயல் நடந்து கொண்டே இருந்தது. அவற்றைப் பொறுத்துப் பொறுத்து இயலாது போக தமிழ் இளைஞர்களின் எழுச்சி, பயங்கரவாத முத்திரை குற்றப்பட்டதுடன் அவர்களை அழிப்பதாய் தொடுக்கப்பட்ட போர் தமிழினத்தை அழிக்கும் இன அழிப்புப் போராக உருமாற்றம் பெற்றது. அந்தப் போர் வன்னிப் பெருநிலப் பரப்பில் பல்லாயிரம் தமிழ் மக்களைக் கொன்றொழித்த போராய் இலங்கையில் பயங்கரவாதம் பூண்டோடு அழிக்கப்பட்டதான வெற்றி அறிவிப்புடன் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

போர் தந்த வடுக்களைச் சுமந்த தமிழ் மக்களின் மனங்களை ஆற்றுப்படுத்தும் எவ்வித செயற்பாடுகளிலும் பேரினவாத அரசுகள் ஈடுபடவில்லை. மாறாக தமிழ் மக்களைக் காயப்படுத்துவதிலும் அவர்களின் பூர்வீகங்களை கபளீகரம் செய்வதிலும் அவர்களின் இருப்புக்களை கேள்விக் குறியாக்கும் செயற்பாடுகளிலும் தீவிரம் காட்டினர்.

இந்த நிலையிலே நாட்டின் பெரும்பாண்மைச் சிங்கள மக்



களின் மனங்களில் பாரிய மாற்றம் ஒன்று விதைக்கப்பட்டது.

அது நாட்டின் ஊழல்வாதிகளுக்கு எதிரான மக்கள் போராக வெடிக்க, பாரிய மக்கள் எழுச்சி; ராஜபக்சக்களின் ஆட்சி பீடத்தை அத்திபாரத்துடன் தகர்ப்பதாய் மாற்றம் பெற்றது.

இந்த மாற்றம் நாட்டில் வாழும் சகல இன மக்களும் ஒன்றுபட்டாலே இந்த நாட்டை முன்னேற்றப் பாதையில் நடைபோட வைக்கலாம் என்ற உயரிய சிந்தனையை சிங்கள மக்கள் மனங்களில் விதைத்தது.

இதன் தொடர்ச்சி இலங்கை வரலாற்றில் முதன் முறையாக ஜே.வி.பியை பிரதிநிதித்துவப்படுத்தும் அநுர குமார திஸாநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆட்சிபீடம் ஏறியது.

நாட்டு மக்கள் ஊழல் அற்ற ஆட்சியையே விரும்புகிறார்கள். அவர்களுக்கு நாட்டை சூறையாடாத நல்ல தலைவர் தேவை. அந்தத் தலைவராக அநுரகுமார திஸாநாயக்கவை மக்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்..

2019 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் அநுர பெற்றுக் கொண்ட வாக்கு வீதம் வெறும் 3.56 என்பதாய் இருந்த போதிலும் ஐந்து வருடங்களில் ஊழலை ஒழிக்கவல்ல தலைவராக அநுரகுமார திஸாநாயக்க நாட்டு மக்கள் மத்தியில் உருவெடுத்திருந்தார். அதுவே அவரின் பலமிக்க வெற்றியின் இரகசியம்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கில் அநுரகுமார திஸாநாயக்கவிற்கு குறிப்பிட்ட அளவு வாக்குகள் வீழ்ந்துள்ளதுடன் இது ஏலவே நடந்து முடிந்த தேர்தலுடன் ஒப்பிடும் போது அதிகம் என்பதும் குறிப்பிட வேண்டிய விடயம்.

இவ்வாறான நிலையில் பதவியேற்ற பின்னர் ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது எனக்கு வாக்களித்தவர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன். எனக்கு வாக்களிக்காதவர்களின் மனங்களை வெல்ல முயற்சிப்பேன் என்று கூறியிருந்தார்.

நிலை இதுவாக இருக்கையில் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா ஒரு விடயத்தை கூறியிருந்தார். அது தமிழ் மக்களை மனரீதியாக பாதிப்படையச் செய்யும் கருத்தாக மாறியிருக்கிறது.

13 ஆவது திருத்தச் சட்டமோ அதிகாரப் பகிர்வோ வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கு தேவையில்லை என்பதே ரில்வின் சில்வாவின் கருத்து.

வடக்கு மாகாணத்தில் பாரிய பிரச்சினைகள் நிலவுகின்றன A9 வீதி மிக அழகாக இருக்கின்றது. ஆனால் அதனைத் தாண்டி மக்கள் குடியிருப்புகளுக்குள் சென்றால் அங்கு மக்கள் பெரும் துன்பப்படுகிறார்கள். பொருளாதார ரீதியில் அவர்களின் நிலை மிக மோசமாக இருக்கின்றது. அவர்களின் பிரதான தேவைகள் பல கொழும்பை நாடுவதாய் இருப்பது மிகச் சிரமமானது என்றவாறு தெரிவித்த அவர் இதுவே தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகள்.

இது தவிர்ந்து அதிகாரப் பகிர்வையோ, 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தையோ தமிழ் மக்களுக்கு வழங்கத் தேவையில்லை என்று அவர் கூறியிருக்கிறார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதில் ஏனைய அரசாங்கங்களுடன் ஒப்பிடுகையில் அநுர அரசின் செயற்பாடுகள் திருப்தி தருவதாய் அமைந்துள்ளதாயினும் வடக்கு மக்கள் எதனால் துன்பப்படுகிறார்கள்? இந்தத் துன்பத்திற்கான காரணி எது? என்பதை சீர்தூக்கி பார்க்காமல் சுதந்திரத்திற்கு பதில் சோறு கொடுத்தால் சரி என்றவாறு ரில்வின் சில்வா கூறிய கருத்து ஏற்புடைய கருத்தல்ல.

பொருளாதார ரீதியான பாரிய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டி இருக்கின்ற போதிலும் தமிழினத்திற்கான தீர்வை, இறுதி யுத்தத்தில் நடைபெற்ற போர்க்குற்ற மீறல்களுக்கான நீதியான விசாரணையை, குற்றம் இழைத்தவர்களுக்கான தண்டனையை; இவ்வாறு தமிழினத்தின் எதிர்பார்ப்பு வேறு திசையில் இருக்கும் போது தமிழினத்திற்கு அதிகாரப்பகிர்வு தேவையில்லை எனக் கூறி அவர்கள் பிரச்சினையை திசை திருப்ப முற்படுவதை இனியொரு போதும் யாரும் செய்யக் கூடாது என்பதே தமிழ் மக்களின் அன்பான வேண்டுகோள்.

அபிமன்யு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். நயினாதீவைச் சேர்ந்த பெரியார் நாகலிங்கம் ஏகாம்பரநாதன் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஏகாம்பரநாதன் மும்மொழி ஆற்றல் மிக்கவர். மிகச் சிறந்த நிர்வாகத் திறமை கொண்டவர். சோதிடத்தில் அவரிடம் இருந்த ஆற்றல் அபரிதமானது.

அத்தகைய பெரியார் ஏகாம்பரநாதன் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அவருக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அது சரி நடக்கப் போகும் பாராளுமன்றத்தேர்தலில ஆருக்கு வாக்களிக்கிற தெண்டு தெரியாமல் இருக்குது.

அந்தளவுக்கு ஏகப்பட்ட அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன.

**பண்டிதர்:-**

முன்பெல்லாம் தொகுதிவாரியான தேர்தல் முறை இருந்தது.

அந்தந்தத் தொகுதியில செல்வாக்குடையவர்கள் தேர்த



நாகலிங்கம் ஏகாம்பரநாதன்

லில நிற்பினம்.

அந்தத் தொகுதி மக்கள் தங்களுக்கு ஏற்றவரை தங்களின் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் அனுப்புவினம்.

ஆனால் இப்ப இருக்கிற தேர்தல் முறையில அரசியல் கட்சி சரி, சுயேட்சைக் குழுக்கள் சரி அந்தந்தத் தேர்தல் மாவட்டங்களில் எத்தனை பேரைக் களத்தில நிறுத்த வேணுமோ அத்தனை பேரையும் நிறுத்தியாக வேணும்.

அதால ஒருவருக்குத் தேர்தலில கேட்கிற விருப்பம் இருந்தால், அவர் தன்ர அணிக்கு தேவையானவர்களைச் சேர்க்க வேண்டி இருக்குது.

**மூப்பர்:-**

விதானையார் சொல்லுறது தான் உண்மை. எங்கட யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில யார் யார் போட்டியிடு கினம் எண்டு கூடத் தெரியாத அளவில நிலைமை இருக்குது.

சிலவேளை தேர்தல் முடிந்த பிறகு கூட, அவரும் தேர்தலில நிண்டவரோ எண்டு கேட்கிற அளவில தான் நிலைமை இருக்குது.

மூப்பர் இவ்வாறு கூற, அந்நேரம் வாத்தியார் வைத்திலிங்கம் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். இதனை அவதானித்த கங்காணி கார்த்திகேயன் என்ன வாத்தியார் கடும் யோசனையில மூழ்கி இருக்கிறியள் என்ன சங்கதி.

**வாத்தியார்:-** அரசியலில மாற்றம் வேணும் எண்டு நினைக்கிறம். ஆனால் மாற்றம் என்பது சமூக நடைமுறைகளிலும் தேவையாக இருக்குது.

**கங்காணி:-** என்ன வாத்தியார் சொல்லுறியள்

**வாத்தியார்:-** அண்மையில இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுகயீனம் காரணமாக இறந்து போன துயரச் சம்பவம் நடந்தது.

அந்த இறப்பு நிகழ்வுக்குப் போயிருந்தன்.

இறுதிக்கிரியைகளை சிவாச்சாரியார் நடத்தி வைத்தார்.

எங்கட தமிழ்ப் பண்பாட்டில தாலி என்பது மிகவும் முக்கியமான பொருள். கணவன் இறந்து விட்டால் தாலிக் கொடியைக் கழற்றி அவரின் உடலில வைக்கிற நடைமுறை உண்டு.

உண்மையில ஒரு இளம் பெண் தாலியைக் கழற்றுகிற அந்தக்கணம் மனித இதயங்களை நெகிழவைக்கும். அந்தளவுக்கு அது துயரம் நிறைந்தது.

ஆனால் தாலி கழற்றிய பிறகு, அந்தப் பெண்ணின் குங்குமத்தை இறந்த கணவனின் கையால் அழிக்கப்படுகிறது, கூந்தல் அவிழ்க்கப்படுகிறது.

இந்தச் சம்பவங்கள் நடக்கிறதைப் பார்த்த போது மிகப் பெரிய கவலையாக இருந்தது. நம் வாழ்வியலில எத்தனையோ மாற்றங்கள் நடந்தாயிற்று. இருந்தும் இது விடயத்தில ஏன் இன்னும் நாங்கள் மாற்றத்தை ஏற்படுத்தாமல் இருக்கிறம்.

இவ்வாறு கூறிய வாத்தியார் கண்கலங்கிக் கொண்டார்.

நிலைமையைப் புரிந்து கொண்ட சிறாப்பர் கனகசபை இதற்கு என்ன வாத்தியார் செய்யலாம் என வினவினார்.

**வாத்தியார்:-** எங்கட தமிழர் வாழ்வில் ஆதி காலத்தில; கணவன் இறந்தால் உடன் கட்டை ஏறுகிற நடைமுறையும் இருந்தது.

ஆனால் காலப்போக்கில மூட நம்பிக்கைகள் மறைந்து அறிவியல் சிந்தனைகள் எழுச்சி பெற்ற போது, உடன் கட்டை ஏறுகிற மிக மோசமான நடைமுறையும் இல்லாமல் போயிற்று.

இப்படியாகப் பெண் அடிமைத் தனம் இருந்த காலத் தில் எத்தனையோ ஆக்கினைகளும் அநியாயங்களும் நடந்தன.

ஆனால் இனியும் அவ்வாறானவற்றுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

ஆகையால மரணச் சடங்குகளின் போது கணவன் இறந்தால் தாலி கழற்றுவது, பொட்டழிப்பது, கூந்தல் அவிழ்ப்பது, திருமணத்தின் போது கட்டிய கூறைச் சாறியை எரிப்பது என்ற நடைமுறைகளை இல்லாது செய்ய வேணும்.

**மூப்பர்:-** பூனைக்கு மணிகட்டுறது ஆரு வாத்தியார்.

**வாத்தியார்:-**

பொருத்தமற்ற நிகழ்வுகள் நடக்கும் போது அதைப் பார்த்துக் கொண்டிருப்பதும் பாவச் செயல் தான்.

என்னைப் பொறுத்தவரை, கணவன் உயிரிழந்தால் தாலிக் கொடியைக் கழற்ற வேணும் என்ற நடைமுறையை மாற்ற வேணும்.

அதேபோல பொட்டழிக்கிறது, கூந்தலைக் குலைக்கிறது இவற்றையும் முழுமையாக நிறுத்த வேணும்.

**விதானையார்:-** வாத்தியார் நீங்கள் சொல்லுறது சரி தான்.

இருந்தாலும் இதை எப்படி நடைமுறைப்படுத்துறது. எங்கட மக்கள் சமூகம் அதை ஏற்றுக் கொள்ளுமா? எண்ட கேள்விகள் இருக்கத்தானே செய்யுது.

**வாத்தியார்:-**

விதானையார் எங்களிட்ட எத்தனையோ மாற்றங்கள் நடந்திருக்குது.


இந்த மாற்றத்தை நிச்சயம் மக்கள் ஏற்றுக் கொள்ளுவினம்.

நாங்கள் செய்ய வேண்டியது முதலில அபரக்கிரியைகளைச் செய்கின்ற சிவாச்சாரியார்களை அழைத்து அவர்களோட கதைக்க வேணும். அவர்கள் நினைத்தால் எல்லாவற்றையும் மாற்றியமைக்க முடியும்.

**பண்டிதர்:-**

அப்ப இது தொடர்பில ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்யலாம்.

இவ்வாறு பண்டிதர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார்கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## மரணச்சடங்கில் உள்ள தேவையற்ற நடைமுறைகளை விட்டுவிலகுவோம்

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலை புத்தகப் பை எடை அதிகமாக உள்ளதே. இது மாணவர்களின் கல்வியை பாழாக்குமா?

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் பின் தமிழரின் எதிர்காலம் என்னவாகும்?**

யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்கு 23 அரசியல் கட்சிகள், 21 சுயேட்சைக்குழுக்கள். 396 போட்டியாளர்கள். வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 6 ஆசனங்களுக்கு 22 அரசியல் கட்சிகள், 25 சுயேட்சைக் குழுக்கள். 423 பேர் களத்தில்.

இவ்வாறு நிலை இருந்தால் தமிழினம் என்ன செய்வது. முன்பெல்லாம் தேர்தலில் நிற்பவர்களைக் காண்பது அரிது.

இப்போது தேர்தலில் நிற்பவர்கள் பத்துப்பேரில் ஒருவர் என்ற நிலையில் இருக்கிறது.

இது தமிழினத்தின் ஒற்றுமையையும் பலத்தையும் சுக்குநூறாக உடைக்கும் செயல் அன்றி வேறெதுவும் இல்லை.

எமது ஒற்றுமையையும் பலத்தையும் நாமே உடைத்து எறிகிறோம் என்று நினைக்கும் போது நெஞ்சம் கனத்து விடுகிறது.

**தனுசன் — ஆனைக்கோட்டை**

**இலங்கை, அபிவிருத்தி அடைந்து வரும்நாடு என்ற நிலையில் இருந்து அபிவிருத்தி அடைந்த நாடு என்ற நிலைக்கு வர என்ன செய்ய வேண்டும்?**

நாட்டு மக்களாகிய எம் ஒவ்வொருவருக்கும் நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற பாரிய சவால் உண்டு.

அதை நாம் பொறுப்பாக எடுத்து முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லாவிட்டால் நம் எதிர்கால சந்ததி எம்மைப் பழிசொல்லும் நிலை வரும். அதனால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்ற முயற்சிக்க வேண்டும்.

வீட்டில் அநாவசியமாக ஒளிரும் மின்குமிழை நிறுத்துவதில் இருந்து பாரிய தொழிற்றுறைகளை ஏற்படுத்தி வெளிநாட்டு நாணயங்களை உள் வரச் செய்வது வரை நாட்டை முன்னேற்றும் செயலாகவே கருதப்படும்.

இதற்கு எமது அரசியல்வாதிகள் மனம் மாற வேண்டும். வாகன போமிற்றையும் மதுபானசாலை அனுமதியையும் விற்று கோடி பார்க்கும் எண்ணத்தை மூட்டை கட்ட வேண்டும்.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 076 097 3126 என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**தர்மபாலன் — முகமாலை**

**மனம் திருந்தல் பற்றி என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?**

தவறு என்பது தவறிச் செய்வது
தப்பு என்பது தெரிந்து செய்வது
தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணும்
தப்புச் செய்தவன் வருந்தியாகணும்
நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி...

இன்றைய தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்தப் பாடல் நன்றாகப் பொருந்தும்.
உப்புத்தின்றவன் தண்ணி குடித்தாக வேண்டும் என்பது போல தவறு செய்தவன் வருந்தியாகணும் இதுவே இறைவனின் தீர்ப்பு

**இளங்கோ — மானிப்பாய்**

**மக்களுக்கென மன்றம் வந்தோர் மக்களை ஏமாற்றினால் மக்களால் எதைச் செய்ய முடியும் வியாசரே?**

நாம் தான் அது புரியாமல் மீண்டும் மீண்டும் அரைத்த மாவை அரைப்பது போல அவர்களையே மன்றம் அனுப்பிக் கொண்டிருக்கி றோமே.
மக்களாகிய எம்மிடம் இருக்கும் ஓட்டு என்ற சக்தி இருக்கிறதே அது மிகப் பலம் வாய்ந்தது. நீ நான் என்று பிரிந்து நிற்கும் போது அதன் வீரியம் குறைந்தே இருக்கும். நாம் என்று ஒன்றிணையும் போது அதன் வீரியம் ஆயிரம் மடங்கு ஆக பெருகும்.
ஓட்டு என்ற ஆயுதத்தை நயவஞ்சக நரிகளை வீட்டுக்கு அனுப்புவதற்காக நாம் பயன்படுத்த வேண்டும்.
அப்போது தான் நேர்மையானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். என்ன புரிந்ததா?



மனம் திருந்தல் பற்றி என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?

**மதுவன் — மீசாலை**

**அதிகாரப் பகிர்வு தமிழ் மக்களுக்கு தேவையில்லை என்கிறாரே ஜே.வி.பியின் பொதுச் செயலாளர்?**

இதுதான் பெரும்பான்மை அரசியல் தலைவர்களின் உண்மை முகம்.
அதிகாரப் பகிர்வு தேவையில்லை. நாம் பெரும்பான்மையினரின் காலடியில் வாழ ஆசைப்படுகிறோம் என்று தமிழினம் கூற வேண்டும்.

அப்படி தமிழினம் கூறுமாக இருந்தால் குறித்த விடயத்தை தெற்கு அரசியல் தலைவர்கள் கூறலாம்.

பாதிக்கப்பட்ட தமிழினம் நீதிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் ஏங்கிக் கிடக்கிறது. இங்கோ தெற்கு இனவாதிகள் தமிழினத்துக்கு அதிகாரப்பகிர்வு தேவையில்லை என்று விசும்புப் பேச்சு பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

**பிரியன் — கிளிநொச்சி**

**பாடசாலைப் புத்தகப்பை எடை அதிகமாக உள்ளதே. இது மாணவர்களின் கல்வியைப் பாழாக்குமா?**

இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளுடன் போரிடும் போது அதிக எடை கொண்ட ஆயுதங்கள் மற்றும் இதர பொருட்களை சுமந்து சென்று போரிடும் நிலை இருந்தது.

இதனால் படையினர் விரைவிலேயே களைத்து சோர்ந்து விடும் நிலை இருந்தது. இறுதி யுத்தத்தில் குறித்த நிலையை மாற்றிய படையினர் அதிக பாரத்தைச் சுமக்காமல் சண்டையில் ஈடுபடும் முறைமையைக் கையாண்டனர்.
அதில் வெற்றியையும்கண்டனர்.
மாணவர்களுக்கு புத்தகச் சுமையைக் குறைத்து வாழ்க்கைச் சுமையை எப்படி எதிர்கொள்வது என்பது கற்றுத் தந்தாலே போதுமானது. அவர்கள் வாழ்வில் வெற்றிகளை கண்டுவிடுவார்கள்.

**சுதன் — குப்பிளான்**

**ஐ.நா தீர்ப்பை ஏற்க முடியாது என்கிறதே அரசு?**

ஒரு இனத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தைப் பிரயோகித்து அந்த இனத்தை அழித்த அவர்களைக் கருவறுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது என்று கூறுவதற்குள் இருக்கும் இன வஞ்சகத்தை என்னவென்று கூறி விட முடியும்.

ஏதோ இந்த நாட்டில் தமிழ் மக்களுக்கு உரிமை இல்லை என்பது போலவும் அவர்கள் செய்த தவறுக்கு தண்டனை தந்தது போலவும் அரசுகள் நடப்பது ஒருநாளும் அறமாகாது.

பாதிக்கப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இதுவே தர்மமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் வான் பாதுகாப்புக் கவசங்கள் எப்படிச் செயற்படுகின்றன?




(சென்றவாரத் தொடர்ச்சி...)

### அயர்ன்டோம் உருவாக்கத்தில் அமெரிக்காவின் பங்கு! இது எத்தனை சதவிகிதம் துல்லியமானது?

கடந்த 2006ஆம் ஆண்டு லெபனான் நாட்டை இஸ்ரேல் ஆக்கிரமித்தபோது கடுமையான போர் மூண்டது. அப்போது ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயிரக்கணக்கான இராக்கெட்களை இஸ்ரேலில் வீசி கடும் சேதம் ஏற்படுத்தினர். அதனால் ஒரு கட்டத்தில் லெபனான் நாட்டிலிருந்து இஸ்ரேல் படைகள் பின்வாங்க நேரிட்டது. இதைத் தொடர்ந்து அடுத்த ஆண்டே தன் நகரங்களையும் மக்களையும் பாதுகாக்க ஒரு வான் பாதுகாப்புக் கவசம் உருவாக்கப் போவதாக இஸ்ரேல் அறிவித்தது. இஸ்ரேல் அரசின் ராணுவத் தொழில்நுட்ப நிறுவனமான ரஃபேல் அட்வான்ஸ்டு டிஃபன்ஸ் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனம் இதை வடிவமைத்தது. அதன்பின் இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் இதை உருவாக்கியது. இதன் உருவாக்கத்தில் அமெரிக்காவின் பங்களிப்பும் கணிசமாக இருந்தது.

2011ஆம் ஆண்டு இது செயற்பாட்டுக்கு வந்தது. இஸ்ரேல் வான்வெளியில் ஊடுருவும் இராக்கெட்கள், குறுரக ஏவுகணைகள், ட்ரோன்கள், ஹெலி கொப்டர்கள், சிறு விமானங்கள் என எல்லாவற்றையும் கண்டறிந்து இடைமறித்துத் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட சிஸ்டம் இது. இது 90% துல்லியமானது. இதுவரை சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வான்வெளி ஆயுதங்களைத் தாக்கி அழித்திருக்கிறது என்று பெருமையுடன் சொல்கிறது இஸ்ரேல். பாதுகாப்புத்துறை நிபுணர்கள் இந்தப் புள்ளிவிவரங்களை ஏற்கவில்லை என்றாலும், அயர்ன் டோம் 80% துல்லியமான பாதுகாப்புத் தருகிறது என்று ஒப்புக்கொள்கிறார்கள். இன்றைக்கு உலக அளவில் இயங்கும் பல்வேறு வான் பாதுகாப்புக் கவசங்களில் மிகச் சிறந்தது என்று இதையே சொல்கிறார்கள்.

### அயர்ன்டோமின் மூன்று கட்ட ஆக்ஷன்!

வான் பாதுகாப்புக் கவசமான அயர்ன் டோம் பட்டரிகள் நாட்டின் பல்வேறு எல்லைகளில் நிறுவி வைக்கப்பட்டுள்ளன. இதில் மூன்று கருவிகள் உள்ளன. இவை மூன்றும் வெவ்வேறு கட்டங்களாகச் செயற்படுகின்றன.

முதலில் செயற்படுவது இதன் ரேடார். அயர்ன் டோமில் இரண்டு, மூன்று ரேடார்கள் உண்டு. தன் வான் எல்லைக்குள் எந்த ஒரு சிறிய பொருள் வந்தாலும் இது கண்டுபிடித்துவிடும். மிகச்சிறிய ட்ரோன்கள் கூட இதன் கண்காணிப்பிலிருந்து தப்பாது. வெயில் மழை, பனி என்று எந்தச் சூழலிலும் துல்லியமாகச் செயற்படும். பகல், இரவு என்ற வித்தியாசமும் இல்லை. வருடத்தின் 365 நாட்களிலும் 24 மணி நேரக் கண்காணிப்பு. தாக்குதல் எங்கிருந்து வருகிறது, எந்த திசையில் நெருங்குகிறது என்பதை ரேடார் கண்டுபிடித்துச் சொல்லிவிடும்.

### ஏவுகணைகள் VS ஏவுகணைகள்! முள்ளை முள்ளால் எடுக்கும் சிஸ்டம்!

ரேடார் இப்படி ஆபத்தைக் கண்டறிந்ததும், அயர்ன்டோமில் இருக்கும் 'Battle Management and Weapon Control System' என்ற கட்டுப்பாட்டு அமைப்பு அடுத்த கட்டமாக அலேர்ட் ஆகிவிடும். இந்த கன்ட்ரோல் சிஸ்டம் அந்த ரொக்கெட் அல்லது ஏவுகணையின் பாதையை நொடிகளில் அலசிப் பார்க்கும். அது எங்கே சென்று விழுந்து தாக்கும் என்பதைக் கணிக்கும். ஆள் நடமாட்டமில்லாத பாலைவனத்தில் சென்று அது விழும் என்றால், போய் விழட்டும் என்று அமைதியாக விட்டுவிடும். மக்கள் நெருக்கம் மிகுந்த நகர்ப்புறத்திலோ அல்லது இராணுவத் தளங்களிலோ தாக்கும் அபாயம் இருக்கிறது என்றால் உடனே அந்த கன்ட்ரோல் சிஸ்டம் பரபரப்பாகிவிடும். இது வானிலேயே தாக்கி அழிக்கப்பட வேண்டிய ஏவுகணை என்ற எச்சரிக்கையை அது கொடுக்கும்.

(தொடரும்...)



மீன்பிடித் தொழிலை ஜீவனோபாயமான தொழிலாகக்கொண்டு வாழும் மக்கள் கொடூரமான உள்நாட்டு யுத்தத்தில் தமது சொத்துக்கள், உறவுகள், உடல் அங்கங்களை இழந்து நிர்க்கதியான நிலையில் இருந்து மீண்டும் தனது வாழ்க்கையை முதல் நிலையிலிருந்து ஆரம்பித்துள்ளனர். இம் மக்கள் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகச் செய்து வருகின்ற நிலையில் அவர்களது வாழ்க்கையில் பல இன்னல்களை சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

முல்லைத்தீவின் பல கரையோர பகுதிகள், களப்புக்கள், சிறிய ஆறுகள் என்பன மீன்பிடித் தொழிலுக்கு உதவி புரிகின்றன. அதன் அடிப்படையில் சுண்டிகுளத்திலிருந்து முல்லைத்தீவு சார்ந்த பகுதியானது கொக்கிளாய், நாயாறு, நந்திக் கடல், முள்ளிவாய்க்கால் போன்ற ஏரிகளைக் கொண்டதாகும்.

நந்திக்கடல் பகுதியானது மீன்பிடிக்குரிய சிறந்த இடமாக உள்ளது. நந்திக்கடல் களப்புப் பகுதியில் உள்ள மக்களின் முக்கிய கைத்தொழிலும் வாழ்வாதாரமும் மீன்பிடிப்பதாகும். அந்தக்களப்பு பகுதியும் அரசாங்க அதிகாரிகள் மற்றும் உயிரியல் திணைக்களத்தால் உரிய வகையில் பராமரிக்கப்படாமல் சட்டவிரோத மீன்பிடி காரணமாகவும் தமது வளங்களை இழந்து வருவதாகவும் அதனால் தாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் மீனவர்கள் கூறுகின்றனர்.

2016ஆம் ஆண்டு நீதிகள் மற்றும் வளத்துறை அமைச்சின் படி முல்லைத் தீவில் 3800 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். முல்லைத்தீவில் 6450 மீனவக் குடும்பங்களும் 8950 நேரடி ஈடுபாடு உடையவர்களும் 27,770 மொத்த மீனவர்களும் உள்ளனர். முல்லைதீவில் நன்னீர் மீன்பிடி 251 உம் கடல் மீன்பிடி 5060 உம் காணப்படுகிறது

மீனைப் பாதுகாக்கவும் கரைக்குக் கொண்டு செல்வதற்கும் நாடு முழுவதிலும் உள்ள நுகர்வோருக்கு கொண்டு சேர்ப்பதற்குமான மற்றும் ஒரு இடையூட்டு சேவையாக ஐஸ் உற்பத்தியைக் குறிப்பிட முடியும். முல்லைத்தீவில் 3 பனிக்கட்டி ஆலைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனை விட முல்லைத் தீவில் 1293 மொத்தப் படகுகளும் 946 FRP படகுகளும் உள்ளன.

சுனாமி ,உள்நாட்டு யுத்தம் போன்றவற்றில் பலதரப்பட்ட விதத்தில் பாதிப்படைந்திருக்கும். தென் இலங்கை மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடியும் சவால்களை ஏற்படுத்துகிறது . பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்படுவதனால், மேற்கூறப்பட்ட பல இயற்கை இன்னல்கள், மானிடர் இன்னல்களினால் குடும்பங்களில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

தங்கூசி வலைகள், சுருக்குமடி வலைகள் ஆகியவற்றைப் பாவிப்பது சட்டவிரோதமாக மீன்பிடிப்பதால் களப்புப் பகுதியில் நீரில் வளங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மீட்டெடுக்க முடியாத வகையில் அழிவை சந்திப்பதாகவும் உள்ளூர் மீனவர்கள் கவலை அடைந்துள்ளனர். இவ்வாறு இவர்களது வாழ்க்கையானது பல சவால்களுக்கு மத்தியிலும் அவர்களது ஜீவனோபாயத்திற்காக தொழிலை மேற்கொள்கின்றனர்.

சி. கதீசனா,
யாழ். பல்கலைக்கழகம்.

# முல்லைத்தீவும் மீன்பிடி மக்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: தெய்வம்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: குன்னக்குடி வைத்தியநாதன்
பாடியவர்: மதுரை சோமசுந்தரம்



கோடி மலைகளிலே கொடுக்கும் மலை எந்த மலை?
கொங்குமணி நாட்டினிலே குளிர்ந்த மலை எந்தமலை?
தேடி வந்தோர் இல்லமெல்லாம் செழிக்கும் மலை எந்த மலை?
தேவாதி தேவரெல்லாம் தேடி வரும் மருத மலை
அஆஆ.. ஆஆஆ.. மருதமலை மருத மலை முருகா

மருதமலை மாமணியே முருகய்யா
மருதமலை மாமணியே முருகய்யா
தேவரின் குலம் காக்கும் வேலய்யா ஐயா
மருதமலை மாமணியே முருகய்யா
தேவரின் குலம் காக்கும் வேலய்யா ஐயா
மருதமலை மாமணியே முருகய்யா

மணமிகு சந்தனம் அழகிய குங்குமம்
மணமிகு சந்தனம் அழகிய குங்குமம்
ஐயா உமது மங்கல மந்திரமே

மருதமலை மாமணியே முருகய்யா...

தைப்பூச நன்னாளில் தேருடன் திருநாளும்
பக்தர்கள் கொண்டாடும் கந்தய்யா ஆ..
தைப்பூச நன்னாளில் தேருடன் திருநாளும்
பக்தர்கள் கொண்டாடும் கந்தய்யா ஆ..

மருதமலை மாமணியே முருகய்யா...

கோடிகள் குவிந்தாலும் கோமகனை மறவேன்
ஆ...ஆ ஆ ஆ....ஆ...ஆஆ ஆஆ ஆஆஆஆஆஆ
கோடிகள் குவிந்தாலும் கோமகனை மறவேன்
நாடியென் வினை தீர நான் வருவேன்
நாடியென் வினை தீர நான் வருவேன்

அஞ்சுதல் நிலை மாறி ஆறுதல் உருவாக
எழுபிறப்பிலும் உன்னை எட்டுவேன் ஆ..
அஞ்சுதல் நிலை மாறி ஆறுதல் உருவாக
எழுபிறப்பிலும் உன்னை எட்டுவேன் ஆ..

மருதமலை மாமணியே முருகய்யா...

சக்தித் திருமகன் முத்துக்குமரனை மறவேன் நான் மறவேன்
பக்திக் கடலென பக்திப் பெருகிட வருவேன் நான் வருவேன்
சக்தித் திருமகன் முத்துக்குமரனை மறவேன் நான் மறவேன்
பக்திக் கடலென பக்திப் பெருகிட வருவேன் நான் வருவேன்

பரமனின் திருமகனே அழகிய தமிழ்மகனே
பரமனின் திருமகனே அழகிய தமிழ்மகனே
காண்பதெல்லாம் உனதுமுகம் அது ஆறுமுகம்
காலமெல்லாம் எனதுமனம் உருகுது முருகா
காண்பதெல்லாம் உனதுமுகம் அது ஆறுமுகம்
காலமெல்லாம் எனதுமனம் உருகுது முருகா

அதிபதியே குருபரனே அருள்நிதியே சரவணனே
அதிபதியே குருபரனே அருள்நிதியே சரவணனே

பனியது மழையது நதியது கடலது
சகலமும் உன்தொரு கருணையில் எழுவது
பனியது மழையது நதியது கடலது
சகலமும் உன்தொரு கருணையில் எழுவது
வருவாய் குகனே வேலய்யா ஆஆ...ஆஆ...ஆஆ.
தேவர் வணங்கும் மருதமலை முருகா

மருதமலை மாமணியே முருகய்யா...

# கண்ணனும் கந்தனும்! கண்ணதாசனின் சிந்தனை!

**“கவிஞரே... நான் வயலினில் தொகையறா வாசிக்கிறேன். வார்த்தைகளைப் போடுறீங்களா?” என்று ஒரு பந்தயம் வைத்தார். கவிஞர் தயாரானார். குன்னக்குடி வைத்தியநாதன் தர்பாரி கானடா ராகத்தில் அந்த ரியூனை வயலினில் வாசித்து முடித்தார்.**

நம்பினார் கெடுவதில்லை. இறைவன் திரும்பத் திரும்ப பக்தர்களுக்குச் சொல்லும் சேதி அது. கவியரசர் கண்ணதாசன் வாழ்க்கையிலும் அது நடந்தது. அவருடைய மகளுக்குத் திருமணம் முடிவாகி நாள் நெருங்கிக் கொண்டிருந்தது.

பண உதவி செய்வதாகச் சொன்ன வரிடமிருந்து பணம் வரவில்லை. கண்ணதாசன் மனதளவில் கலங்கிப்போயிருந்த நேரம் அது. சாண்டோ சின்னப்பா தேவர் தன் புதுப்படத்துக்கு பாடலெழுத அவரை அழைத்திருந்தார்.

பணக் கவலை ஒருபுறமிருந்தாலும் “கண்ணா நீயே துணை' என்று தன் இஷ்ட தெய்வத்தை வணங்கி, கண்ணன்மேல் பாரத்தைப் போட்டு விட்டுக் கிளம்பிப்போனார் கண்ணதாசன்.

'தெய்வம்' என்ற அந்தப் படம் முருகனின் மகத்துவத்தை விளக்குவது. அதை கண்ணதாசனிடம் குறிப்பிட்டுத்தான் அழைத்து வந்திருந்தார் தேவர்.

படத்துக்கு இசையமைப்பாளர் குன்னக்குடி வைத்தியநாதன். இசையமைப்பாளர்களும் கவிஞர்களும் விளையாட்டாகப் போட்டி வைத்துக்கொண்டு தங்கள் திறமையை ஊரறியச் செய்து கொண்டிருந்த காலம் அது.

பாடல் பதிவுக்கு வந்திருந்த கண்ணதாசனிடம் குன்னக்குடி வைத்திய நாதன், “கவிஞரே... நான் வயலினில் தொகையறா வாசிக்கிறேன். வார்த்தைகளைப் போடுறீங்களா?” என்று ஒரு பந்தயம் வைத்தார். கவிஞர் தயாரானார். குன்னக்குடி வைத்தியநாதன் தர்பாரி கானடா ராகத்தில் அந்த ட்யூனை வயலினில் வாசித்து முடித்தார்.

அடுத்த கணம் கவிஞரிடமிருந்து வார்த்தைகள் பிரவாகமாகக் கொட்டின. 'கோடி மலைகளிலே கொடுக்கும் மலை எந்த மலை...' அசந்துபோனார் வைத்தியநாதன். அடுத்து பல்லவியைப் போட்டார். 'இப்போ பார்க்கலாம்...

என்று இறங்கினார். கவிப்பேரரசரிடமிருந்து தங்குதடையில்லாமல் வார்த்தைகள் ஆறாகப் பெருகிவந்தன. “மருதமலை மாமணியே முருகையா... தேவரின் குலம் காக்கும் வேலய்யா...' வார்த்தைகளில் கிறங்கிப் போன குன்னக்குடி வைத்திய நாதன், கண்ணதாசனை வணங்கி மனமுவந்து பாராட்டினார்.

பல்லவி, சரணம் என 'மருதமலை மாமணியே...' என்ற அந்தப் பாடலை இசைக்கலைஞர் மதுரை சோமு பாட, சாகாவரம் பெற்ற பாடலாகத் தமிழ் மக்கள் மத்தியில் அது நிலைத்து நின்றுவிட்டது.

பாடல் வரிகளைக் கேட்டு நெக்குருகிப் போனார் சாண்டோ சின்னப்பா தேவர். “கவிஞரே... உங்க பொண்ணு கல்யாணத்துக்கு ஒரு லட்சம் ரூபாய் நான் தருகிறேன். அத்தோடு என்னுடைய கல்யாண மண்டபத்திலதான் உங்க பொண்ணு கல்யாணத்தை நடத்தணும். அதுக்காக ஒரு பைசாகூடக் கொடுக்கக் கூடாது' என்று சொல்லிவிட்டார்.

நான் கண்ணனை நம்பினேன். அவன் கந்தன் வடிவில் வந்து என் கவலையைத் தீர்த்தான் என்று உள்ளம் நெகிழ்ந்துபோனார் கவியரசர்.

இந்தச் சம்பவத்தை எழுத்தாளர் பி.ஜி.எஸ்.மணியன், மறக்க முடியாத திரை இசை' என்ற நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நானொரு நத்தை

நானொரு நத்தை
தயவு செய்து
என்னை அவசரப்படுத்தாதீர்கள்
அதோ அந்த செர்ரி மரங்களை நோக்கி
நான் மெல்ல நகர்கிறேன்
நான் சென்றடையவேண்டிய
இடம் ஒன்றுமில்லை
செய்தே தீரவேண்டிய
வேலைகளும் கிடையாது
இந்த வேகமே எனக்கு உவப்பு
நான் மெதுவாகப் போகவே விரும்புகிறேன்
இது எனக்கு
நான் கடந்து செல்லும்
பூக்கள் அனைத்தையும்
புல்லின் இதழ்கள் ஒவ்வொன்றையும்
அறிந்து கொள்வதற்கு
வேண்டிய நேரத்தைத் தருகிறது
நான் ஒரு நத்தை
இது என் பாதை
தயவு காட்டுங்கள்
என்னை அவசரப்படுத்தாதீர்கள்
எனக்கு இந்நாள் முழுவதும் இன்னும்
மீதமிருக்கிறது.

*பார்பரா வான்ஸ்(அமெரிக்க கவிஞர்)*
*மொழிபெயர்ப்பு க. மோகனரங்கன்*



## மனங்களை உடைப்பவன்

எமது வெப்பியாரங்களில் இருந்து
வெளிவரும் வார்த்தைகளை
எனது முட்கள் செருகப்பட்ட
முகாரிகளால் முடக்குகிறாய்
மனவடுக்களின் ஆழத்தில்
உறைந்திறுகிப்போன
வன்மங்களை எமக்கெனத்
தயார்படுத்தியே எடுத்து வந்துள்ளாய்

வரிவடிவங்களால் மட்டும் நிரம்பிய
உந்தன் பாத்திரத்தை எம்மீது
மீண்டும் மீண்டும் கவிழ்க்கிறாய்

தயாரித்துக் கொண்டுவரப்பட்ட
குற்றப்பத்திரிகையை எம்மீது
குரூரமாய் ஒப்புவிக்கிறாய்
நாமும் எம்மைச் சுற்றியுள்ளவைகளும்
உன் வரண்டு போன பார்வைக்கு
அழகானதாகவே தெரியவில்லை
என்கிறாய்

எங்கள் வனத்தின் மரங்கள்
பூப்பதில்லை எனவும் புலம்புகின்றாய்
வேறோர் வனத்தை எமக்கு
எடுத்துக்காட்டாக்குகிறாய்
இறுதி வரை ஒன்றைப் புரிந்துகொள்ள
நீ தயாராகவே இல்லை. அது
நிலம் ஒன்று, ஒளி ஒன்று
நீர் ஒன்று, மரம் மட்டும்
வேறு வேறு என்பதனை.

தி.சாந்தகுமார்.

## விட்டுச் சென்ற காதல்

ஒரு பாடலின் ரூபத்தில்
உணர்வு அற்று
உயிர் நெளிகிறது..

வரிகளில்
வந்தமர்ந்த காதல்
இசையை
முன்னும் பின்னுமாய்
அசைக்கையில்
ஒரு ஊஞ்சலைப் போல
ஆடுகிறது காலம்..

ஞாபகங்கள் அமர்ந்து
சென்றதில் அமைதியாய்
இருப்பதில்லை
எந்தவொரு அசைவும்,
இசைத்துக்
கொண்டுதானிருக்கிறது..

காலம் தள்ளி நின்றாலும்
சிறகுகளை விட்டுச் சென்றிருக்கிறது
காதல்....



சாங்கரி சிவகணேசன்

## மௌனத்தின் தேடல்-735



## சில்லு வண்டி

சில்லு வண்டி சில்லு வண்டி தடியால்
தட்டி ஓடும் சில்லுவண்டி
அப்பா தாத்தா காலப்
பாரம்பரிய சில்லுவண்டி
பாரம்பரியம் மாறாமல்
சிறுவர் நாங்கள்
ஓடி விளையாடும் சில்லுவண்டி
முன்னால் ஓடும் வண்டிச் சில்லை
பின்னால் சிறுவர்கள் தடியால் தட்டி
துரத்திச் செல்லும்
அழகு ஒரு தனி அழகே.

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

## சுதந்திரமான ஓட்டுநர்

ரம்மியமான சூழல் தூய்மையான
தென்றல் நடைபாதை
மணற்பரப்பு- வீதி அனுமதி இல்லை
இன்று வெறுமனே சில்லை
மட்டும் உருட்டுகிறார்கள் சிறுவர்

இன்று வெறும் சில்லு
நாளை பெரும் வண்டிகளை
ஓட்டிச் செல்லும் காலம்
நிச்சயம் உண்டு.
அப்போ தம்பிமார்
பேருவகை கொள்ளட்டும்

அ.இ.குலமாலினி, சித்தன்கேணி.

## ஏக்கம்


கிட்டிப்புள் அடித்து
வளையத்தோடு வலம் வந்த
கிராமத்து வாழ்க்கை
இப்போதும் பசுமையாய் இருக்கிறது.
மேல் வீடு கட்டி
கீழ் மேலாய் நடக்கின்றோம்
விள்ளயாட ஒரு துண்டு நிலம்
பேரப்பிள்ளைக்கில்லை

## வழிகாட்டிகள்

ஓடி விளையாடு பாப்பா
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
என்னும் பாரதியின் இனிய பாடலுக்கு
என்றும் பொருந்தும் காட்சியிது
வாழ்வில் வரும் தடைகள் தாண்டிட
நல்வழிகாட்டிகள் அமைதல் வேண்டும்
நீந்தத் தெரிந்த பின்னர் தான்
நீரில் இறங்குவதாய் அடம்பிடித்தால்
காரியம் யாவும் கானலாகிவிடும்
தைரியத்தை வளர்த்து விரிவாக்க
திடமான ஆரோக்கியம் தேவை
இதற்கு பயிற்சிகள் கைகொடுக்கும்.

க.நாகராசா, நுணாவில்.

## மௌனத்தின் தேடல்- 736



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசம் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## வாழ்க்கை என்னும் சக்கரம்

சிறுவர்கள் வண்டிச் சக்கரம்
தடியால் உறுட்டும் விளையாட்டு
வானத்தில் பறக்கும் பறவை
மண்ணில் மிதக்கும் மகிழ்ச்சி

வண்டி பவளத்தால் போல்
அழகிய ஓட்டத்தில் மிதக்கும்
மிதக்கும் பசுமைக் காட்டில்
இலக்குகளை நோக்கிச் சென்றால்

உறுட்டும் குதூகலத்தில்
இன்பம் எங்கும் பரவுது
சிறுவர்கள் வண்டிச் சக்கரம்
மனம் கவரும் இனிமை!

கொக்குவில் மைந்தன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



32 செங்கை ஆழியான்

யாழ்ப்பாணக் கோட்டை ஆங்கிலேயர் வசமாகியது பெப்ரவரி,14.1796 ஆம் ஆண்டு.ஆங்கிலேயரிடம் ஒல்லாந்தரின் கொழும்புக் கோட்டையும் சரணடைந்தது சேர்னல் ஜேம்ஸ் ஸ்ருவார்ட் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், கொழும்பு, காளி ஆகிய பிரதேசங்களுக்கு கவனராக நியமிக்கப்பட்டான். மக்களது நம்பிக்கையைப் பெறும் நோக்கமாக மதக்கட்டுப்பாட்டை இவன் தளர்த்திவிட்டான்.

முதற்கட்டமாக கத்தோலிக்கக் குருமார் தமது சமயப்பணியைத் தொடரலாமெனவும், மக்கள் தாம் விரும்பிய மதத்தை அனுட்டிக்கலாமெனவும் ஸ்ருவார்ட் சட்டத்தைத் தளர்த்தினான்.

எனினும், வருமானம் ஈட்டுவதற்கு உதவிய எச்சட்டத்தையும் யாழ்ப்பாணக் கோட்டை யாழ்ப்பான சேகரிப்பு பிராந்தியத்தின் நிர்வாக மையமாக மாறியது யாழ்ப்பாணம், மன்னார், கற்பிட்டி ஆகிய பகுதிகள் இந்த வரி சேகரிப்புப் பிராந்தியத்தில் மைந்தன் சென்னையிலிருந்து வரி சேகரிப்பு உத்தியோகத் தர்கள் இங்கு கொண்டு வரப்பட்டனர் அவர்கள் இந்தியர்கள், அவர்கள் கோட்டைக்குள் "கலெக்டர் ஆபிஸ்" ஒன்றைக் கச்சேரி என்ற பெயரில் அமைத்த னர்.

"கச்சேரி என்பது ஹிந்திச் சொல்லாகும். அமில்தார் (வரி வசூலிப்பவர்). கொத்லால் (பொலிஸ்), குமாஸ்தா (லிகிதர்) என்ற பதவிகளைச் சென்னையிலிருந்து இங்கு வந்த உத்தியோகத்தர்களே வகித்தனர். சிப்பாய்களாகப் போர்த்துக்கேயர் படையிலும், ஒல்லாந்தர் படையிலும் கூலிக்கு வேலைபார்த்த இந்தியர்கள், ஆங்கிலேயர் காலத்தில் வரி வசூலிக்கும் உத்தியோகத்தர்களாக யாழ்ப்பாணத்திற்கு வந்தனர். மதராசி வரி வசூலிப்போர் தம் எதேச்சாதிகாரப் போக்கில் நடந்து கொண்டதால் பின்னர்இவர்களிடமிருந்து பொறுப்பு மீள எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஆங்கிலேய நிர்வாகிகள் மக்கள் மீது பல்வேறு வரிகளை விதித்தனர்: மீன்வரி, உப்பு,சாராய வரி, கள்வரி, தலை வரி எனப் பல வரிகள் ஒரு கட்டத்தில் 1, செப்ரெம்பர் 1796 இல் தென்னை வரியையும் விதித்தனர். ஒவ்வொரு தென்னைக்கும் வருடத்திற்கு ஒரு வெள்ளிப்பணம் வரியாகச் செலுத்துமாறு மக்களைக் கேட்டனர். மக்களது எதிர்ப்பால் 1797, மார்ச் மாதத்தில் இந்த வரி நீக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் கோட்டையில் ஆங்கிலேயரின் கொடி பறந்த காலவேளைகளில் நிகழ்ந்த சம்பவங்கள் பலவகையாயினும், அவற்றில் முக்கியமான சிலவற்றை நோக்குவோம். ஆங்கிலேயரின் ஒன்றரை நூற்றாண்டாட்சியில் அடிமைத்தனமாக வாழ்ந்து மக்கள் பழகிவிட்டனர்.

(தொடரும்...)




காலத்தின் பதிவு 129

# கடல் புறா

கலிங்கத்தின் படைபலத்தை உடைக்க இதை ஒரு தளமாக உபயோகிக்கத் திட்டமிட்டேன். அந்தத் திட்டம்? இப்பொழுது மாறிவிட்டது. இளையபல்லவன் பதில் பெரும் விந்தையாகயிருந்தது. தேவனுக்கு "ஏன் மாறிவிட்டது?" என்று அவன் கேட்ட கேள்வியிலும் வியப்பு மண்டிக்கிடந்தது.

இளையபல்லவன் கண்டியத் தேவனைச் சில விநாடிகள் கூர்ந்து நோக்கினான். "நிலைமைக்குத் தக்கபடி திட்டங்களை மாற்றுவது விவேகம் தேவரே, என்ற இளையபல்லவன் முகத்தில் தீவிரமான உறுதியுடன் கவலையும் மண்டிக் கிடந்ததைக் கண்டியத் தேவன் கவனித்தான். ஆகவே கேட்டான் தேவன், "அப்படியென்ன நிலைமை இங்கு ஏற்பட்டிருக்கிறது?" என்று.

"மிகவும் அபாயமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தேவரே! இன்னும் ஒரு மாத காலத்தில் நாம் மட்டும் முன் யோசனையுடன் நடந்துகொள்ளாவிட்டால் நீரும் நானும் நமது மாலுமிகளும் அழிக்கப்படுவோம். இந்த அக்ஷ்ய முனையில் பெரும் உயிர்ச்சேதமும் வேறு வித நாசமும் ஏற்படும். நாம் இப்பொழுது எரிமலையின் உச்சியில் உட்கார்ந்திருக்கிறோம். அது உள்ளூரப் புகையத் தொடங்கியிருக்கிறது.

வெடிக்க ஒரு மாத காலமிருக்கிறது. அது வெடிக்கும்போது" என்று பேசிக்கொண்டு போன இளைய பல்லவன் சற்றுப் பேச்சை நிறுத்திக் கண்டியத் தேவனைத் தன் கூரிய கண்களால் நோக்கினான். அது வெடிக்கும்போது?" கண்டியத் தேவன் குரவில் கலக்கமிருந்தது, குழப்பமும் இருந்தது.

அக்கினிப் பிழம்பு நம்மை அழிக்காதிருக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றான் இளைய பல்லவன். எப்படி ஏற்பாடு செய்வது? என்று கேட்டான் கண்டியத்தேவன். அந்தப் பொறுப்பை எனக்கு விட்டுவிடுங்கள். அக்கினிப பிழம்பு நம்மை அழிக்காதது மட்டுமல்ல. நமது எதிரிகளை அழிக்கவும் அதைத் திருப்பிவிட வேண்டும் என்றான் இளையபல்லவன்.

இந்த விளக்கத்தைக் கேட்கக் கேட்கக் கண்டியத் தேவன் முகத்தில் பெரும் சந்தேகச் சாயை படர்ந்தது. அந்தச் சாயையின் உட்கருத்தைப் புரிந்துகொண்ட இளைய பல்லவன் முகத்தில் புன்முறுவல் விரிந்தது. மனத்திலுள்ளதை விட்டுக் கேளுங்கள் தேவரே என்றான் இளைய பல்லவன் அந்தப் புன்முறுவலைத் தொடர்ந்து. மனத்தில் அப்படியெதுவும் இல்லை கண்டியத் தேவன் குரலில் தயக்க மிருந்தது. "பயப்படாமல் சொல்லும் என்று ஊக்கினான் படைத்தலைவன். மன்னிக்க வேண்டும். தங்கள் போக்கு சில நாட்களாகவே... என்று மென்று விழுங்கினான் தேவன். கண்ணியமானவர்கள் ஒப்புக்கொள்ளத் தக்கதாக இல்லை என்று முடித்தான் இளைய பல்லவன். கண்டியத் தேவன் சில விநாடிகள் குழம்பினாலும் இறுதியில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஆம், படைத் தலைவரே! கண்ணியமானவர்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாயில்லை. அது மட்டுமல்ல, நாமிருக்கும் நிலைமைக்கும் சாதகமல்ல அது. நீங்கள் மித மிஞ்சிக் குடிக்கிறீர்கள் என்றான்.

இளையபல்லவன் முகத்தில் புன்முறுவல் மேலும் விரிந்தது. "யார் சொன்னது அப்படி?" என்று வினவினான் படைத்தலைவன், மெல்ல நகைத்து. யாரும் சொல்ல வேண்டிய தில்லை என்றான் கண்டியத் தேவன். நீங்களே கண்டிருக்கிறீர்கள்.. என்று கூறிய இளைய பல்லவன் பதிலில் ஏளனமிருந்தது.

அந்த ஏளனத்தைக் கண்டியத் தேவன் கவனித்தானான் ஆனாலும் அதை அலட்சியம் செய்யாமலே சொன்னான். ஆம் நானே கவனித்தேன். நான் மட்டுமல்ல எல்லோரும் கண்டிருக்கிறார்கள் என்று. "கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய், என்று பழமொழியொன்றைச் சொன்னான் இளையபல்லவன் சிரித்துக் கொண்டே. (தொடரும்...)

# எட்டாக் கனியும் கிட்டாக் கனியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

421

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## மருந்துகளை ஒழுங்காக பாவிக்கத் தவறினால்..

(சென்ற வாரத்தொடர்ச்சி...)

உங்கள் வாகனத்தில் ஏதேனும் கோளாறுகள் ஏற்படும் போது, வாகனப் பழுது பார்த்தலில் நிபுணத்துவம் பெற்றவர்களிடமே நீங்கள் வாகனத்தை காட்டுவீர்கள். ஆனால், உங்கள் உடம்பில் ஏதேனும் பிரச்சினை வரும்போது, அதில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களின் ஆலோசனைகளை விடுத்து, அதில் அடிப்படை அறிவு இல்லாத ஏனையோரின் பேச்சை ஏன் கேட்டு நடக்கிறீர்கள்? இது மிகவும் ஆபத்தானது. ஒரு இயந்திரத்தின் மீது செலுத்தும் கவனத்தை தயவுசெய்து உங்கள் உடலின் மீதும் செலுத்துங்கள்.

இரண்டாவது காரணமாக, மருந்துகளின் பக்க விளைவுகளும் நோயாளியை ஒழுங்காக மருந்துகளை எடுக்க விடாமல் தடுக்கின்றன. எல்லா மருந்துகளிற்கும் சிறிய சிறிய பக்க விளைவுகள் உண்டு. சில மருந்துகள், அவற்றை ஆரம்பத்தில் உள்ளெடுக்கும் போது சிறிய பக்க விளைவுகளைக் காட்டும்.

ஆனால் நாளடைவில் உடம்பானது மருந்திற்கு பழக்கப்பட்ட பின், அந்த பக்க விளைவுகள் ஏற்படாது. மருந்துகளின் பக்க விளைவுகளை உங்களால் தாங்க முடியாமல் இருந்தால், நீங்கள் வைத்தியரை நாடி அதற்கு மாற்றீடான மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம். மூன்றாவது காரணம் நாம் பல்வேறு மருத்துவர்களிடம், வைத்திய ஆலோசனை பெறுவது ஆகும். உதாரணமாக, ஒருவருக்கு நீரிழிவு நோய் இருக் கிறது என அறிந்த பின், ஒரு மருத்துவரிடம் வைத்திய ஆலோசனையைப் பெறாமல் பல மருத்துவர்களிடம் ஆலோசனையைப் பெற்று, இறுதியில் எந்தவொரு மருத்துவரின் கண்காணிப்பும் இன்றி மருந்துகளையும் ஒழுங்காக எடுக்காமல் அவரின் நோய் நிலைமை இன்னும் தீவிரமடையும். எனவே, ஒரு வைத்தியரிடம் தொடர்ச்சியாக மருந்துகளைப் பெற்று உங்கள் நோய் நிலையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள்.

வைத்திய ஆலோசனைப்படி மருந்துகளை எடுக்காமல் இருப்பதற்கான அடுத்த காரணம், நோயாளியின் சமூக, பொருளாதார பின்னணியாகும். ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படும்போது, அவருக்கு பரிந்துரைக்கப்படும் எல்லா மருந்துகளும் சிலசமயம் அரசாங்க வைத்தியசாலையில் இருப்பதில்லை. இவ்வாறான நிலையில், எல்லா நோயாளிகளாலும் தனியார் மருந்தகங்களில் மருந்துகளை வாங்க முடியாது.

இதனால், அவர்கள் அந்த மருந்துகளை எடுப்பதை தவிர்த்துக் கொள்கின்றனர்.

இதற்காக, அவர்கள் வைத்தியர்களை அணுகினால் சில வேளைகளில் அவர்களுக்கு உதவும் நிறுவனங்கள் மூலம் அதற்கான உதவிகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

இதன்மூலம், அவர்கள் தொடர்ச்சியாக மருந்துகளை எடுப்பதனை உறுதிப்படுத்த முடியும். அடுத்த காரணம் சில நோயாளிகள் மிகவும் தூரமான இடங்களில் இருந்து வைத்தியசாலைக்கு வருகின்றனர். இது அவர்களுக்கு சிரமமானதாக இருக்கும். அவர்களுக்கு வாகனப் போக்குவரத்து இல்லாமல் இருக்கலாம் வாகனப் போக்குவரத்திற்கு பணம் இல்லாமல் இருக்கலாம் தனியாக வர முடியாமல் இருக்கும். இப்படியான நிலைகளில் அவர்கள் வைத்தியசாலைக்கு வந்து மருந்துகளைப் பெற்றுக் கொள்ளாமல்



இருப்பார்கள். இதற்கு அவர்கள் வைத்தியர்களுடன் கலந்தாலோசித்து, தங்களுக்கு அருகில் உள்ள வைத்தியசாலையில் கிளினிக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதன் மூலம் தொடர்ச்சியாக மருந்துகளை எடுப்பதனை உறுதிப்படுத்த முடியும்.

அடுத்த காரணம், குடும்ப ஆதரவும் உதவியும் நோயாளிகளுக்கு இல்லாமல் இருப்பதாகும்.

வயதானவர்கள் நாட்பட்ட நோய்களினால் பீடிக்கப்படும் போது, அவர்களை கிளினிக்கிற்கு அழைத்து வர வேண்டியது குடும்ப உறுப்பினர்களின் கடமையாகும். ஆனால், பலர் இதனை செய்வதில்லை.

தற்போது பிள்ளைகளிடம் பெற்றோர் பற்றிய ஒரு அலட்சிய மனப்பான்மை இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இறுதியான காரணமாக, சமூக வலு காணப்படுகின்றது.

அதாவது சமூகத்தினரின் விமர்சனங்களிற்கு பயந்தே பலர் தங்கள் நோயிற்கு மருந்துகளை எடுப்பதில்லை. இவ்வாறு செய்து உங்களை நீங்களே துன்பத்தில் தள்ளாமல், மேற்குறிப்பிட்ட அனைத்து காரணங்களையும் விடுத்து அல்லது சரிசெய்து, வைத்திய ஆலோசனைப்படி ஒழுங்காக மருந்துகளை எடுத்து சுகதேகிகளாக வாழ முயற்சி செய்வதே சிறந்தது.


Dr. நந்தினி ஞானப்பிரகாஷ்,
பொது வைத்திய நிபுணர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## கேட்பதைச் சரியாகக் கேட்போம்.



**பை**பிளின் நற்செய்தியில் மாற்கு 10:35-45 பகுதி இன்று தரப்படுகின்றது. அக்காலத்தில் செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் இயேசுவை அணுகிச் சென்று அவரிடம், "போதகரே நாங்கள் கேட்பதை நீர் எங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறோம். என்றார்கள். இயேசு அவர்களிடம், "நான் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார். அவர்கள் அவரை நோக்கி, நீர் அரியணையில் இருக்கும்போது எங்களுள் ஒருவர் உமது வலப்புறமும் இன்னொருவர் உமது இடப்புறமும் அமர்ந்துகொள்ள எங்களுக்கு அருளும். என்று வேண்டினர். இயேசுவோ அவர்களிடம், நீங்கள் என்ன கேட்கிறீர்கள் என உங்களுக்குத் தெரியவில்லை. என்கிறார்

அமெரிக்காவின் 16ஆவது ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனை ஒரு நாள் அதிகாலையில் அரசு அலுவலர்கள் முக்கியமான காரியம் ஒன்றில் அவருடைய ஆலோசனையைப் பெறும்படி வந்திருந்தனர். அவரது அறையருகில் சென்ற போது அவர் யாருடனோ பேசிக் கொண்டிருப்பதுபோல் கேட்டது. ஆகவே அவர் வரும்வரை காத்திருந்தனர். மிக நீண்ட நேரத்தின் பின்பு ஆபிரகாம் லிங்கன் வந்தார். "நாங்கள் அதிகாலையே வந்து விட்டோம். நீங்கள் யாருடனோ பேசி கொண்டிருந்தீர்கள். எனவே காத்திருந்தோம்" என்றனர். "வேறு யாருமல்ல, நான் ஆண்டவரோடுதான் பேசி கொண்டிருந்தேன்" என்று ஆபிரகாம் லிங்கன் பதில் கூறினார். அப்போது அவர்களது வியப்பைக் கண்ட ஆபிரகாம் லிங்கன் விளக்கினார்.

"நான் சிறுவனாக இருக்கும்போது காடுகளில் விறகு வெட்டி வாழ்க்கையை நடத்தி வந்தேன். என் பாட்டிதான் என்னை பராமரித்து வந்தார்கள். அவர்கள் எனக்கொரு திருவிபிலியத்தைக் கொடுத்து ஒவ்வொரு நாள் அதிகாலையில் எழுந்தவுடன் அதை தியானிக்க வேண்டும் என்றும் ஆண்டவருடன் மட்டுமே முதலில் பேச வேண்டும் என்றும் கூறினார்கள். அந்த பாடத்தை இன்னும் விட்டு விடாமல், முதலில் ஆண்டவருடன் நான் பேசுகிறேன்" என்றார்.

ஆபிரகாம் லிங்கன் காலையில் எழுந்தவுடன் ஆண்டவரோடு ஆழமான உறவு வைத்துக் கொண்டார். ஆண்டவரிடம் என்ன கேட்க வேண்டும் என்பதையும் தெளிவாக தெரிந்திருந்தார். அவர் தினமும் "இறைவா, நேர்மையை கடைப்பிடிக்கவும் இரக்கம் கொள்வதில் ஆர்வத்தையும் உமக்கு முன்பாகத் தாழ்ச்சியோடு நடந்துக்கொளளும் வரத்தையும் எனக்கு வாரி வழங்கும்" என்று வேண்டினார். அதுவே ஆபிரகாம் லிங்கன் வாழ்வின் அதிஉச்ச வளர்ச்சிக்குக் காரணம்.

"செபதேயுவின் மக்கள் யாக்கோபும் யோவானும் இயேசுவுக்கு நெருக்கமாக இருந்தாலும், இயேசுவைமுழுமையாகப் புரிந்து கொள்ளவில்லையென்பது அவர்களின் கேள்வி தெரிவிக்கிறது. இந்த பகுதிக்கு முந்தைய பகுதியில், இயேசு மீண்டும் தன்னுடைய பாடுகளைப் பற்றி முன்னறிவிக்கிறார். தான் படப்போகிற வேதனைகளைப் பற்றி விபரிக்கிறார். ஆனால், அதைச் சிறிதும் புரிந்து கொள்ளாமல் அவர்கள் இயேசு விடத்தில், தங்களைப்பற்றியும், தாங்கள் பெற வேண்டிய பதவிகள் பற்றியும் பேசுவது, உண்மையில், இயேசுவைப்பற்றி, முழுமையாகப் புரிந்து கொள்ளாததை, சொல்கிறது. அவர்கள் இயேசுவிடம் கேட்டது சுயநலத்திற்காக. அரியணையில் இருந்தால் அதிகாரம் செய்யலாம், மக்களை அடக்கி ஆளலாம் என்று நினைத்தார்கள் எனலாம். அவர்கள் கருத்து முற்றிலும் தவறானது. பதவியில் இருந்து அந்த சுகத்தை அனுபவிக்கலாம் என்று நினைத்தார்கள். இது சரியான அணுகுமுறை அல்ல.

நான் செல்லக்கூடிய இடம் வேறெதுவும் இல்லை என்ற உணர்வு என்னை முழந்தாள் படியிட வைத்தது. எனது சொந்த அறிவும் என்னைச் சுற்றியுள்ள அனைத்து சத்திகளும் போதாதென்று அவ் வேளைகளில் உணர்ந்திருக்கிறேன்" என்று ஆபிரகாம்லிங்கன் ஒரு இறை பணியாளரிடம் கூறியுள்ளார். ஆபிரகாம் லிங்கன் இறைவனிடம் வலுவடைந்த நேரத்தில் சக்தி கேட்டார். தளர்ச்சியுற்ற நேரத்தில் ஆற்றல் கேட்டார். மக்களுக்கான விடுதலையைக் கேட்டார். அவருக்காக எதையும் கேட்கவில்லை. மக்களுக்காக கேட்டார். நம்பிக்கையோடு கேட்டார். அனைத்தையும் பெற்றுக் கொண்டார்.

நாம் என்ன கேட்கிறோம். நாம் கேட்கும் முறை என்ன. நாம் இயேசுவோடு செபத்தில் இணைந்திருந்தால் மட்டும் போதாது. அவர் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையும் புரிந்து கொள்ளவேண்டும். அதற்கேற்றாற்போல, நமது வாழ்வையும் மாற்றிக்கொள்ள வேண்டும். இல்லையெனின் இந்த சீடர்களைப்போல இயேசுவைப் பற்றி நாமும் தவறான பார்வையைத்தான் பெறுவோம். கேட்பதைச் சரியாகக் கேட்போம். பார்வைபெறுவோம்.

ம.பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர
பத்திரிகையாளர்.

---

### உள்ளூராட்சி தேர்தலுக்கு

# புதிய வேட்புமனுக்கள் கோரப்படமாட்டாது

## தேர்தல் ஆணையாளர்



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு புதிய வேட்புமனுக்கள் கோரப்படமாட்டாது என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னர் கோரப்பட்ட வேட்புமனுக்களின் பிரகாரம் தேர்தல் நடைபெறும்.

இந்தத் தீர்மானத்தினால் அநீதி ஏற்படும் என கருதும் எந்தவொரு தரப்பினரும் நீதிமன்றத்தை நாடலாம் என தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (நி)

---

## மழை காலங்களில் கீரை வகைகளை தவிர்க்கவும்

### ஊட்டச்சத்து நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

வெள்ளம் படிப்படியாகக் குறைவடைந்தாலும் வெள்ள நீர் சூழ்ந்த பகுதிகளில் உள்ள நிலத்தில் விளையக்கூடிய கீரை வகைகளை உண்பதை தவிர்க்குமாறு ஊட்டச்சத்து நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஊட்டச்சத்து நிபுணர்கள் மேலும் தெரிவிக்கையில்,"கடும் மழை காரணமாக கழிவறைகள் போன்றவற்றிலிருந்து வெளியேறும் கழிவு நீர் தண்ணீரில் கலந்து நிலத்தில் தேங்குவதால் நிலத்தில் விளையும் கீரை வகைகளை உண்பது மிகவும் ஆபத்தானது ஆகும்.

இதனால் மழை வெள்ளம் குறையும் வரை அகத்தி, முருங்கை போன்ற கீரை வகைகளை மாத்திரம் உண்பது சிறந்ததாகும்.

மேலும் கடும் மழையுடன் கூடிய வானிலை காரணமாக வயிற்றுப்போக்கு, வயிற்றுக் கடுப்பு போன்ற நோய்கள் பரவும் வாய்ப்பு அதிகம் உள்ளதால், இயன்றவரை கொதித்து ஆறிய நீரைப் பருக வேண்டும் என தெரிவித்துள்ளனர். (நி-8)

---

## இணையக் குற்றவாளிகள் தொடர்பில் இன்ரர்போலை நாடும் அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையில் கைது செய்யப்பட்ட 450 வெளிநாட்டு இணைய குற்றவாளிகள் தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

குறித்த நபர்களின் தகவல்களைச் சர்வதேச பொலிஸாருக்கு இலங்கை பொலிஸார் வழங்கியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட வெளிநாட்டவர்கள் சர்வதேச பொலிஸாரின் சைபர் குற்றவாளிகள் பட்டியலில் இருக்கிறார்களா என்பதை கண்டுபிடிப்பதே இந்த விசாரணையின் நோக்கமாகும்.

அண்மையில் கைது செய்யப்பட்ட 218 வெளிநாட்டு இணையக் குற்றவாளிகளைத் தவிர சுமார் 300 பேர் நாட்டின் பல்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களால் இலங்கை மக்களின் வங்கி கணக்குகளில் இருந்து மோசடியான முறையில் பாரிய அளவில் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (நி-8)

---


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1990இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'2"<br>கிபா-18 3/4<br>தகைமை/தொழில்: A/L,விற்பனை முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14858 | பிறப்பு:2000 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>12இல் சூரி செவ்<br>கி.பா: 17 3/4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBA(Final year)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, தகுதியான வரன்<br>தொ.இ: G/14884 |
| பிறப்பு: 1989இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: O/L,Uber delivery<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14859 | பிறப்பு:1996 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: QS, PhD(Follwing)<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ: G/14885 |
| பிறப்பு:1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 25<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: A/L, peon(gov)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14860 | பிறப்பு:1994 இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: BSC, Manager (கனடா)<br>எதிர்பார்ப்பு: கனடா PR உள்ளவர்<br>தொ.இ: G/14895 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

1996, இந்து, விசாகம், ASST. MANAGER
பூர்வீகம் - மாதகல், வதியுமிடம் - LONDON
மணமகன் பதிவு இல: 11088.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1989, இந்து, உத்தரட்டாதி, TEACHER
பூர்வீகம் -யாழ்ப்பாணம், வதியுமிடம் -AUSTRALIA
மணமகன் பதிவு இல: 11096.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

**விளம்பர தொடர்புகளுக்கு 076 097 3127**


## மணமகன் தேவை

1995, இந்து, பூசம், VETERINARY SURGEON
பூர்வீகம் - மீசாலை, வதியுமிடம் -கொழும்பு
மணமகன் பதிவு இல: 11093.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1992, இந்து, ரோஹிணி, DOCTOR
பூர்வீகம் - காரணவாய், வதியுமிடம் - கொழும்பு
மணமகன் பதிவு இல: 11102.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21.01.1933 | 20.10.2022 |

**திதி - 26.10.2024**

திரு. வைத்திலிங்கம் சோமசுந்தரம்
Kokuvil West Mudhali Kovil Trustee
Building Department Colombo,
Sambasivam & Co.

(449) தகவல் - குடும்பத்தினர்

## 250 மில்லியன் பெறுமதியான போதைப் பொருட்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோத போதைப் பொருளை நாட்டுக்குள் கொண்டு வர முயன்ற பயணி ஒருவரை கட்டு நாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

மலேசியன் ஏர்லைன்ஸ்க்குச் சொந்தமான MH 179 விமானத்தில் மலேசியாவின் கோலாலம்பூர் விமான நிலையத்தில் இருந்து கட்டுநாயக்காவுக்கு வந்த பயணியிடம் தேயிலை இலைகள் அடங்கிய பொதிகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 10.197 கிலோகிராம் ஐஸ் வகை போதைப் பொருளை சுங்கப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த போதைப் பொருளின் பெறுமதி 250 மில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக தெமட்டகொட பிர தேசத்தை சேர்ந்த குறித்த நபர் மற்றும் போதைப் பொருள் தொகை என்பன பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ஙி-8)

## வாழ்க வையகம் குருவே துணை வாழ்க வளமுடன்



### யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின்

வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா அடிப்படை பயிற்சிகள் ஆரம்பம்

| | |
|---|---|
| சக்கரை நோய் - DIABETES | இடுப்பு வலி - BACK PAIN |
| மன உளைச்சல் - TENSION | சைனஸ் - SINUS |
| இரத்த அழுத்தம் - BLOODPRESSURE | இருதய நோய் - HEART DISEASE |
| ஆஸ்துமா - ASTHMA | குழந்தை பேறின்மை - INFERTILITY |
| மூட்டு வலி - JOINT PAIN | மாணவர் கை நடுக்கம் - SHIVERING |

தொடர்ந்து பயிற்சிகள் செய்து வர இவற்றில் இருந்து விடுபட்டு ஆரோக்கியமான வாழ்க்கை நம் வசமாகும்.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை எளிய முறை யோகா பயிற்சிகளை பெற ஓர் அரிய சந்தர்ப்பம்

**அன்பர்களே பங்கேற்று பலனடைவீர்...**

**பயிற்சிகளை வழங்குபவர்** - மனவளக்கலை பேராசிரியை அருள்நிதி க.செல்வகுமார் அவர்கள் (தமிழ்நாடு இந்தியா)

**இடம்** :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோயில்

**காலம்** :- ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை(19.10.2024-25.10.2024)

**நேரம்** :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணி வரை

**வாழ்க வளமுடன்**

(சி-1420)

தொடர்புகளுக்கு :- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோயில்,
இல 81 பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு கொக்குவில்,யாழ்ப்பாணம்.
தொ.இல :- 021 222 2772, 077 736 8745, 076 857 1395, 077 891 6407

## மணிவிழா வாழ்த்து



திருமதி.
**ராகினி திருக்குமாரன்**
(SLTS-I, Trained Commerce, B.Ed)
பகுதித் தலைவர் - யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்

சேவைக்காலம் - 36 வருடங்கள்

**சேவை விபரம்**

- நெடுந்தீவு மகா வித்தியாலயம் (17.08.1988 - 31.05.1989) வரை
- வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் (01.06.1989-02.03.1992) வரை
- பலாலி ஆசிரியர் கலாசாலை (03.03.1992-31.12.1993) வரை
- வேலணை கிழக்கு மகா வித்தியாலயம் (01.01.1994-31.12.1994) வரை
- ஊர். புனித அந்தோனியார் கல்லூரி (01.01.1995 - 29.09.1998) வரை
- கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம் (30.09.1998-13.07.2010) வரை
- நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் (14.07.2010-19.10.2024)14 வருடங்கள்

எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்காக 14 வருடங்கள் நிறைவான சேவையாற்றி, ஓய்வு பெறும் ஆசிரியரை வாழ்த்தி அவரது ஓய்வு காலம் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(2313)

Congratulations

வாழ்த்துவோர் - பாடசாலை சமூகம்
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்

## விலைமனுக்கோரல்
## தேநீர்ச்சாலை
## சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்

மேற்படி கல்லூரியில் இயங்கும் தேநீர்ச்சாலையைக் குத்தகை ஒப்பந்த அடிப்படையில் நடத்தக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவத்தினை கீழே குறித்த திகதியில் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| • விண்ணப்ப படிவ விநியோகம் | : 22.10.2024- 05.11.2024 |
| • விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதி | : 19.11.2024 |
| • விண்ணப்ப கட்டணம்(மீளளிக்கப்படாதது) | : ரூபா 500.00 |
| • மீளளிக்கப்படக்கூடிய கட்டுப்பணம் | : ரூபா 10,000.00 |

விண்ணப்பங்கள் யாவும் "தேநீர்ச்சாலை ஒப்பந்த விண்ணப்பம்" எனக்குறிப்பிட்டு மூடிய உறையில் அலுவலக நேரத்தில் பாடசாலையில் நேரடியாகக் கையளிக்கப் படவேண்டும். பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் 20.11.2024 அன்று கல்லூரி அலுவலகத்தில் நண்பகல் 12.00 மணிக்கு திறக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டு தகுதியானவர் தெரிவு செய்யப்படுவர்.

**அதிபர்**

(c-1419)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்காலத்தின் நிஜத்தைப் புரிந்து கொண்டு நடந்தால் எதிர்காலம் வசமாகி விடும் .- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவருக்கு ஓர் அவசர மடல்

பனை அபிவிருத்திச் சபையின் தலைவராகப் பதவியேற்றுள்ள இரேனியஸ் செல்வின் அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

பனை அபிவிருத்திச் சபை அமையப் பெற்று பல வருடங்களாகின்றன.

அதிலும் வட மாகாணத்தின் மிகப்பெரும் சொத்து பனை வளம்.

அதனாலோ என்னவோ ஒல்லாந்தர் காலத்தில் வட மாகாண அரச நிர்வாக இலட்சனையில் பனை மரம் முதன்மைப்படுத்தப்பட்டது.

அத்தகு சிறப்பு எங்கள் வட மாகாண சபையின் இலட்சனையிலும் இடம்பிடித்துக் கொண்டமை ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நாம் அடிக்கடி நினைப்பதுண்டு. தமிழகத்தின் அரச சின்னத்தில் வானுயர்ந்த இராஜ கோபுரம் நிமிர்ந்து நிற்கிறது.

அதேநேரம் எங்கள் வட மாகாண அரச இலட்சனையில் கற்பகதரு எனும் பனை மரம் வானுயர்ந்து கம்பீரமாகக் காட்சி தருகிறது.

இங்குதான் பனை மரத்தை நாம் இராஜ கோபுரத்துக்கு இணையாகப் பிரதிமை செய்திருக்கிறோம் என்று பெருமையடைய முடியும்.

இவ்வாறாக பனை மரத்தை முதன்மைப் படுத்திய நாம் பனை வளத்தால் சமகாலத்தில் ஏதேனும் நன்மையடைந்தோமா என்றால் இல்லவே இல்லை.

சுருங்கக்கூறின் பனையால் எந்த வருமானமும் ஈட்ட முடியாது என்ற நினைப்பே நம் மக்கள் மத்தியில் உண்டு.

வெறுமனே கற்பகதரு என்று கூறுவதனூடாக பனை உற்பத்திகள் அதிகரித்துவிடப் போவதில்லை.

ஒரு காலத்தில் பனை வளம் நம் மக்களின் ஜீவனோபாயத்தின் மூலாதாரமாக இருந்தது.

பனங்கிழங்கு, புளுக்கொடியல், ஒடியல், பனாட்டு, பனங்கட்டி, பதநீர் என அனைத்தும் எம் உணவாகின.

இதுதவிர பாய், கடகம், சுளகு, பனையோலை வேலி, தண்ணீர் இறைப்பதற்குப் பயன்படும் பீலிப் பட்டை என அனைத்துப் பனை உற்பத்திகளும் எங்கள் தொழில் முயற்சிகளின் உள்ளீட்டுப் பொருட்களாயின.

எனினும் சமகாலத்தில் அவை அனைத்துக்கும் பதிலீடு வந்துற்றபோது எல்லாமும் தேவையற்றதாகிவிட, இப்போது பனை மரத்தைத் தேடுவார் எவரும் இல்லை என்றாயிற்று.

இதற்கும் மேலாக, குடிசைத் தொழிலாக இருந்த பனங்கட்டி உற்பத்தி, நிறுவனமயப் படுத்தப்பட்டபோது ஒரு கிலோ இரண்டாயிரம் ரூபாய் என்ற விலையைக் கடந்து போனது.

ஒருமுறையேனும் நீங்கள் தீவகத்துக்குச் சென்று பாருங்கள். பனை விதைகள் தேடுவாரற்றுக் கிடக்கின்றன.

முதிர் பனைகளைத் தறித்து வீடு கட்டுவதாக இருந்தால் கூட, அதற்கும் கடினமான நடைமுறைகள்.

எம்மைப் பொறுத்தவரை பனை அபிவிருத்திச் சபை என்ற நிறுவனம் இல்லாமல் இருந்திருக்குமாயின், வட மாகாணத்துப் பனை வளம் பயன் கொழித்திருக்கும்.

என்ன செய்வது பனை விதையைக் கொள்வனவு செய்கின்ற நடைமுறை இருந்தால் கூட, மக்கள் அதன்மீது கருசனை கொள்வர்.

எனவே இது விடயத்தில் தாங்கள் கவனம் செலுத்த வேண்டும். கலந்துரையாடல்களை நடத்த வேண்டும்.

புதிய நுட்பங்களைக் கையாண்டு பனை வளத்தின் பயனை மக்கள் அடைந்து கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

# முட்டைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன விலை உயர்விற்கு அதுவே காரணம்

## இலங்கை கோழி வியாபாரிகள் சங்கத்தலைவர்

(கொழும்பு)

குளிர்பதன கிடங்குகளில் முட்டைகள் பாரியளவில் பதுக்கிவைக்கப்பட்டிருந்தமையே முட்டை விலை உயர்வுக்கு காரணம் என அகில இலங்கை கோழி வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் மாதலி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இன்று முட்டையின் விலை 40-45 ரூபாவாக அதிகரித்துள்ளது.

சூப்பர் மார்க்கெட்டுகளில் முட்டைகள் முன்பு இருந்ததை விட குறைவாக உள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காரணமாக குளிர்பதன கிடங்குகளில் முட்டைகள் பாரியளவில் பதுக்கி வைக்கப்பட்டிருந்தமையே இந்த விலை உயர்வுக்கு காரணம்.

வரும்பண்டிகைக்காலத்துக்காக முட்டையை அதிக விலைக்கு விற்பதற்காக 20 ரூபாய்க்கு நல்ல முட்டைகளைச்சேகரித்து வந்த இவர்கள் தற்போது தேர்தல் காலம் என்பதால் டிசம்பரில் அதிக முட்டைகள் பயன்படுத்தப்பட்டு நவம்பரில் கேக் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு கோழி கூட வளர்க்காமல் குளிர்பதன கிடங்குகளில் முட்டைகளை சேமித்து வைத்திருக்கும் மக்கள், அரசை அவமானப் படுத்தும் வகையில் முட்டை விலையை உயர்த்தியுள்ளனர்.

இந்த முட்டைக் கிடங்குகளில் உள்ள முட்டைகளை அரசு நேரில் சென்று சோதனை செய்து உரிய தண்டனை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இதன் மூலம் மக்களுக்கு மானிய விலையில் முட்டை வழங்க வாய்ப்பு உள்ளது. நம் நாட்டில் ஏராளமான முட்டைகள் உள்ளன.

மேலும் நாட்டிலிருந்து ஒரு முட்டை கூட கொண்டு வர வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்தார். (ம-7)

### பனை அபிவிருத்திச் சபைக்கு

## புதிய தலைவராக செல்வின் நியமனம்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபைக்கு புதிய தலைவராக ரேனியஸ் செல்வின் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் உறுப்பினர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில் பனை அபிவிருத்திச் சபைக்கு புதிய தலைவராக ரேனியஸ் செல்வின் நியமிக்கப்பட்டுள்ளமை சிறப்பான விடயமாகும்.

ரேனியஸ் செல்வின் மிகவும் அர்ப்பணிப்பான, ஊழலற்ற, வினைத்திறனான, துறைசார் அறிவுடைய அதிகாரி. அவர் நியமிக்கப்பட்டமைக்காக நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம்.

ஆனால், ஊடகங்கள் சிலவற்றில், பனை அபிவிருத்திச் சபைக்கு புதிய தலைவராக ரேனியஸ் செல்வின் நியமிக்கப்பட்டமைக்கு அதன் பணியாளர்கள் அதிருப்தியில் உள்ளனர் என்று ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி முழுவதும் பொய்யானதும் புனையப்பட்டதுமான செய்தியாகும்.

இந்த நியமனத்தால் அதிகாரிகள் சிலர் தங்களின் ஊழல் மோசடிகள் வெளிவருமோ என்ற கலக்கத்தில் உள்ளனர். அவர்களுக்கு இந்த நியமனம் சில பிரச்சினைகளை ஏற்படுத்தலாம். எனினும் பணியாளர்களுக்கு அவ்வாறல்ல -என்றுள்ளது. (ம-7)

## வைத்தியசாலையில் மாவை அனுமதி

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா உடல்நிலை பாதிக்கப்பட்டதன் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழில் உள்ள தனியார் வைத்தியசாலையில் நேற்று மாலை அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

### பெப்ரவரி அல்லது மார்ச்

## 2025 ஆம் ஆண்டுக்கான பாதீடு சமர்ப்பிக்கப்படும்

அடுத்த வருடத்தின் பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான பாதீடு சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தங்காலைப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

துணிச்சல் மிக்கவர்களால் முடியாதது எதுவுமில்லை என்பதை நிரூபித்துள்ளோம்.

ஆரம்பத்தில், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கு எங்களது மிகப்பெரிய சவாலாக இருந்தது.

மிகக் குறுகிய காலத்திற்குள், நாட்டுக்கு சாதகமான நம்பகமான பொருளாதாரத்தை உருவாக்கியுள்ளோம் என்றார். (ம-7)

## புதுக்குடியிருப்பில் மோ.சைக்கிள் விபத்து

### இளைஞன் படுகாயம்

புதுக்குடியிருப்பில்நேற்று மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பரந்தன் பகுதியில் இருந்து வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் உள்ள நகைக் கடையொன்றிற்குள் கண்ணாடிகளை உடைத்துக்கொண்டு புகுந்ததில் இவ்விபத்துச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுவருகிறார்கள். (ம-7,299)

### ஐஸ் போதைப்பொருளுடன்

## கட்டுநாயக்கவில் சந்தேக நபர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 10 கிலோவுக்கும் அதிகமான ஐஸ்போதைப்பொருளுடன் மலேசியாவிலிருந்து வருகை தந்த இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத்திணைக் களம் தெரிவித்துள்ளது.

குறித்த ஐஸ் போதைப் பொருளின் பெறுமதி 250 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரையும் ஐஸ் போதைப் பொருளையும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலதிக தகவல்களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இத்தாலியில் விபத்து இலங்கை இளைஞன் பலி

(ரோம்)

இத்தாலியில் இடம்பெற்ற கோர விபத்தில் இலங்கையைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த அகில பெர்னாண்டோ என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இரு நாட்களுக்கு முன் இடம்பெற்ற விபத்தில் அவர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வெளிநாட்டவர் ஓட்டிச் சென்றதாகக் கூறப்படும் கார் மோதியதில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்த நிலையில், மீண்டும் இத்தாலிக்குச் சென்ற சில நாட்களில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை புறந்தள்ளுகிறதா ஜனாதிபதி அநுரவின் அரசாங்கம்?

## செல்வம் அடைக்கலநாதன்

(யாழ்ப்பாணம்)

"இந்தியாவைப் புறந்தள்ளிவிட்டு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் செயற்படப் பார்க்கிறது. ஆனால், இந்தியாவுடன் அனுசரித்துச் செல்வதே அவர்களுக்கு நல்லதாக இருக்கும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.




அதிகாரப்பகிர்வு மற்றும் 13ஆவது திருத்தச்சட்டங்களை வடக்கின் அரசியல்வாதிகளே கோருகின்றனர். மாறாக மக்கள் அல்ல என அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அபிவிருத்தி என்பது மக்களுக்கு முக்கியம். அதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், அரசியலமைப்பில் உள்ள ஒரு விடயத்தை இல்லையெனக் கூற முடியாது. 13ஆவது திருத்தச் சட்டம் மாகாண சபை முறைமைகளுக்காக அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பொன்றின் ஊடாக மாகாண சபை முறையை இல்லாதொழிக்க முடியும். ஆனால், இதனை நாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

எமது மக்கள் இனப் பிரச்சினையாலும் போராலும் பாதிக்கப்பட்ட மக்கள். அவர்கள் வெறும் அபிவிருத்தியை மாத்திரம் எதிர் பார்ப்பதாக ரில்வின் சில்வா கருதக்கூடாது என தெரிவித்தார். (6-8)

# தேசியமட்ட தட்டெறிதலில் நெல்லியடி மத்தி வெண்கலம்



(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான தேசிய மட்ட தட்டெறிதல் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி மாணவி வி.சங்கீதா வெண் கலப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான தேசியமட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு சுகதாஸ மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த வி.சங்கீதா 32.31 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

# கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த இந்திய கப்பல்



(கொழும்பு)

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான "INS Kalpeni" என்ற கப்பல் நேற்று சனிக்கிழமை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த இக் கப்பலை இலங்கை கடற்படையினர் சம்பிரதாய பூர்வமாக வரவேற்றனர்.

கடலோரக் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் முதன்மையாக விளங்கும் இந்த கப்பலின் சேவை 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்டது.

இலட்சத்தீவுகளில் ஒன்றான கல்பேனி தீவின் பெயரே இந்த கப்பலுக்கு சூட்டப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலானது கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கைகள், கடலோரக்கண் காணிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள், தேடல் மற்றும் மீட்பு நடவடிக் கைகளில் ஈடுபடப் பயன்படுத்தப் படும். (நி-8)

# வெடித்து சிதறிய கைத்தொலைபேசி

(ஹற்றன்)

கையடக்கத் தொலைபேசியின் பற்றரியை கழற்றி சோதனை செய்யும் போது பற்றரி வெடித்துச் சிதறிய சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

ஹற்றனில் உள்ள ஆடை விற்பனை நிலையமொன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த விற்பனை நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் பற்றரி வெடித்த சத்தம் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும், கையடக்கத் தொலைபேசிகளை அதிக நேரம் சார்ஜ் செய்வதால் பற்றரி வெடிக்கும் அபாயம் உள்ளதாகக் கையடக்கத் தொலைபேசி பழுதுபார்ப்பவர்கள் தெரிவிக்கின்றனர். (6-8)





உரும்பிராய் ஞான வைரவ சனசமூக நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முழுநிலாக் கருத்தரங்கில் "வாசிப்புக் கலாசாரமும் சமூக மேம்பாடும்" எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் இரத்தினகுமார் குபேசன் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கியிருந்தார்.

# மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுக் கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கே. திலீபன் மற்றும் முப்படையினர், திணைக்களத் தலைவர்கள் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட உள்ள வடகீழ் பருவப் பெயர்ச்சி காலத்தில் ஏற்பட உள்ள அனர்த்தங்களை குறைப்பது தொடர்பாகவும் அதனை எவ்வாறு கட்டுப்படுத்துவது? அனர்த்தம் ஏற்பட்டால் எவ்வாறு தடுப்பது என்பது குறித்து அவசர முன்னாயத்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

வெள்ள நிலைமையின் போது மக்கள் இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் தங்குவதற்கு 30 இற்கும் மேற்பட்ட தற்காலிக பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

அவ்வாறான பாதுகாப்பு நிலையங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. (6-8-285)

# மீண்டும் சேவையை ஆரம்பிக்கவுள்ள யாழ் தேவி?




(கொழும்பு)

வடக்கிற்கான புகையிரத மார்க்கத்தில் மீண்டும் யாழ் தேவி புகையிரத சேவையை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ்தேவி புகையிரத சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்திய கடன் உதவியுடன் மணிக்கு 120 கிலோமீற்றர் வேகத்தில் செல்லும் வகையில் வடக்கு புகையிரதப் பாதை புதுப்பிக்கப்பட்டு வருகிறது.

குறித்த புகையிரத மார்க்கத்தின் திருத்தப் பணிகள் காரணமாக தற்போது மஹவ வரை மட்டுமே புகையிரதம் சேவையில் ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)




படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 24ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று சனிக்கிழமை யாழ். வடமராட்சி ஊடக அமையத்தில் நடைபெற்றது.

இதன்போது திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

(படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 343...

பொதுத் தேர்தல் தொடர்பில் இது வரை 343 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர்பிலேயே குறித்த சகல முறைப் பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## இந்திய...

மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இந்தியா வின் விஸ்தாரா விமானச் சேவைக்குச் சொந்தமான விமானமொன்றே இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

குறித்த விமானத்திலுள்ள பயணிகள் மற்றும் விமான பணிக்குழாமினர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு, விமானத்தினுள் சோதனை நடத்தப்பட்டது. (ம-7)

## முழங்காவிலில்...

சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது முழங்காவில் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக திடீரென மோட்டார் சைக்கிளை வலதுபக்கமாக திருப்ப முற்பட்டபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியது.

இதில் படுகாயங்களுக்கு உள்ளானவர் உடனடியாக முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## தேர்தல் பாதுகாப்பு...

நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பிலான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மற்றும் தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகளுக்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று பி.ப 3.00 மணியளவில் யாழ். மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இச் செயலமர்வில் விசேடமாக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய கலந்துகொண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான மேலதிக அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்றத் தேர்தல்கள் தொடர்பான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மற்றும் தேர்தல்கள் தொடர்பிலான முறைப்பாடுகளுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டு ஆராயப்பட்டன. (ம-7,33)

## அரச ஊழியர்...

பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு தேசிய மக்கள் சக்தியின் முதலாவது மக்கள் பேரணி நேற்று தங்காலையில் இடம்பெற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கும் நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் உள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## சுன்னாகத்தில்...

நேற்றிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட பிரச்சினையே வாள் வெட்டுக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வாள்வெட்டுக்கு இலக்கானவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,33)

## 400 ஊழல்...

மாத்தறை தங்காலையில் நடைபெற்ற தமது கட்சிக்கு ஆதரவான தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், அவை அனைத்தும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

சட்டரீதியாகவும், முறையாகவும் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் சளைக்காது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

முன்னதாக, எதிர்க்கட்சியாகப் பாராளுமன்றில் செயற்பட்டபோதும் அநுர குமார திஸாநாயக்க இந்த ஆவணக்கோப்புக் குறித்து தகவல்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஜனாதிபதி...

முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டமும் தொலைநோக்குப் பார்வையும் ஐக்கிய மக்கள் சக்தியிடம் மாத்திரமே உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டங்களைச் செயற்படுத்தக்கூடிய திறமையான உறுப்பினர்களைக் கொண்ட குழுவையும் ஐக்கிய மக்கள் சக்தியே கொண்டுள்ளது.

தன்னாலும் ஐக்கிய மக்கள் சக்தியாலும் ஜனாதிபதியுடன்இணைந்து செயற்பட முடியும் என்றார். (ம-7)

## ரூ.400...

பாராளுமன்ற உறுப்பினர்ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நிதி அதிகாரம் ஜனாதிபதியிடம் அல்ல. பாராளுமன்றத்திடம் உள்ளது. ஜனாதிபதியின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் போது, அது எவ்வாறு செய்யப்பட வேண்டும், சரியானதா? அல்லது தவறானதா? எனக் கணக்கிடுவது அவசியம்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பொறுப்பும் பாராளுமன்றத்திடம் உள்ளது. எந்த அரசியல் கட்சி ஆட்சியில் இருந்தாலும், நாட்டின் பொருளாதாரத்தை கையாள்பவர்களுக்கு தகுதியானவர்கள் பாராளுமன்றத்தைப் பலப்படுத்த வேண்டும்.

இல்லையெனில் நாடு மீண்டும் அதள பாதாளத்திற்குச் செல்லும். முன்னைய அரசாங்கம் கடன் பெற்று, மக்களுக்கு எந்தவித நன்மையையும் வழங்கவில்லை.

தேர்தல் பிரசாரத்தின்போது, அந்தப் பணம் முன்னைய அரசாங்கத்தால் திருடப்பட்டதாக தேசிய மக்கள் சக்தி தெரிவித்தது என்றார். (ம-7)

## திடீர் சுகவீனம் 35 ஊழியர்கள் வைத்தியசாலையில்

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரியும் 35 ஊழியர்கள் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது, ஊழியர்கள் ஆடைத் தொழிற்சாலையில் வழங்கப்பட்ட காலை உணவை உட்கொண்ட பின்னர் வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு திடீரென சுகவீனமுற்றுள்ளனர்.

இதனையடுத்து, சுகவீனமுற்ற ஊழியர்கள் நீர்கொழும்பு பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கட்டுநாயக்க பொலிஸார் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


மஹஜன சமபத
திகதி 2024.10.19
சீட்டிழுப்பு இலக்கம் 5630
U 5 1 7 7 1 3
அத சம்பத
U 7 7 1 3
சீட்டிழுப்பு இலக்கம் 205

தன நிதானய
திகதி - 2024.10.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1660
M 16 28 76 77 M
Double Chance 106437

மெகா பவர்
திகதி 19/10/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1978
C 19 39 47 52 73
Double Chance 175235

லக்கி 7 VIP
திகதி 2024.10.19
சீட்டிழுப்பு இலக்கம் 0456
V 3 4 7 0 6 4 V

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3872
சீட்டிழுப்பு திகதி 19.10.2024
E 35 44 61 75
E 080042
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.10.19
சீட்டிழுப்பு இலக்கம் 939
மீனம் 11 17 41 62 மீனம்
106129 17

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.10.2024 வெற்றி வாரம் 338 வர்ணம் நீலம்
சுப்பர் பௌன்
E 3 7 7 1 6 4
38309
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,037,868.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2604 வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 19.10.2024 தினம் சனிக்கிழமை
51 54 59 70 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,853,524.80
DLB

சனிதா
திகதி 2024.10.19 வெற்றி வாரம் 4785
13 37 52 61 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,524,137.60
ரூ.100,000/- 8 3 9 7 0
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4316 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.10.19 தினம் சனிக்கிழமை
13 31 45 46 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,215,850.80
227108
DLB

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 35 19 21 24 34
1780 சிவப்பு 19.10.2024 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 551,282,515.00
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2430
சீட்டிழுப்பு திகதி : 2024.10.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.75,590,224.80
18 31 58 76 J
473554
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

கல்வி நிறுவனம் ஒன்று ஆரம்பிப்பதற்கு மூன்று அறை கொண்ட வீடு அல்லது 2500 sqft விஸ்தீரணம் கொண்ட இடம் உடன் தேவை.
K.K.S வீதி அருகில் அல்லது K.K.S வீதிக்கு கிட்டிய தூரத்தில் இருப்பது விரும்பத்தக்கது.

**076 897 6665**
**070 686 7695**
(2366)

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 35,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஒரு வருட E-Visa இனை 10,000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (451)

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி கரந்தன் வீதியில் பருத்தித்துறை வீதியிலிருந்து 300 m தூரத்திலும் கரந்தன் சந்தியிலிருந்து 100m தூரத்திலும் பேக்கரி ஒழுங்கையில் மேற்கு பக்க 3 ம் சதுரக் காணி நான்கு(4) பரப்பு விற்பனைக்குண்டு. (2308)

**077 959 1320**
**077 358 3750**

## சிறுநீரகம் தேவை

அவசரமாக $A^+$ வகை குருதியுடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது.
வயது எல்லை 25 - 40
தொடர்புகளுக்கு :
**077 041 6405**
Whatsapp
0031617990096(கொலன்ற்) (2333)

## இணைய வழி வணிக செயல்பாட்டுப் பணியாளர் பதவி வெற்றிடம் (Online Business Operator)

நிறுவனம் : VIMIX PVT LTD (UK)
இடம் : மானிப்பாய், யாழ்ப்பாணம்
தகைமைகள் :
1. Degree / HNDIT:- (Photoshop மற்றும் இணைய சந்தைப்படுத்தல் தொடர்பான அறிவு)
2. ஆங்கிலத்தில் சிறப்புத் தேர்ச்சி (speaking and writing)
3. சந்தைப்படுத்தல் தொடர்பான முன் அனுபவம் (E- Commerce).
சம்பளம்: ரூபா 35,000/- முதல் ரூபா 60,000/- (தகுதி அடிப்படையில்)
vstarlondon25@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு CVஐ அனுப்பி வைக்கவும். மேலதிக தகவல்களுக்கு :- 077 070 0362 (448)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சிவகுல வீதியில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- உரும்பிராய் மருதனார்மடம் செல்லும் காப்பெற் வீதி 150 மீற்றர் தூரம்.
- நல்ல சூழல் குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி.
- தரகர் தேவையில்லை.

(2364)
**077 468 3354, 077 288 0152**



## லைடன் புடவை நிலையம்
### யாழ்ப்பாணம்



எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அனைத்து வகையான துணி வகைகள், றெடிமேற் ஆடைகள், மகப்பேற்றுத் தாய்மார்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடைத் துணி வகைகள் போன்ற அனைத்து விதமான பொருட்களையும் 10% விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள் (C-1411)

**10% 12.10.2024 - 30.10.2024**

**Leyden Textile Center**
**410, Hospital Road, Jaffna.**
**021 222 2381**

## Technicians தேவை

கொழும்பில் இயங்கிவரும் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கேபிள் டிவி/ dish antenna service மற்றும் விற்பனை செய்யும் கடைக்கு dish antenna பிட்டிங் மற்றும் repair செய்யக்கூடிய technicians தேவை. திறமைக்கு ஏற்ப உணவு, தங்குமிடம் + Rs.60,000/= + மேலதிக கொடுப்பனவுகள் சம்பளமாக கிடைக்கும், டிரைவிங் லைசென்ஸ் இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
உடன் தொடர்பு கொள்ளவும். (443)

**ராஜன் 0777 710 785**

## லைமன்ஹவுஸ் விற்பனைக்கு

மானிப்பாய் லோட்டன் வீதியில் லைமன் ஹவுஸ். (வேலன்கைப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்) 5 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (2342)

**074 2700 765**


## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு : (402)
**075 033 6759**

# மரண அறிவித்தல்

## திரு. சுப்பிரமணியம் வீரசிங்கம்
### (ஓய்வு நிலை அதிபர்)



பிறப்பு 31.01.1945 — இறப்பு 17.10.2024

புங்குடுதீவு 01ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 02ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் இல. 10 கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சுப்பிரமணியம் வீரசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்) அவர்கள் 17.10.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தனலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்ற சின்னத்தம்பு - முத்தம்மா தம்பதியரின் அருமை மருமகனும் வரதலெட்சுமி(ஓய்வு நிலை ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் கிருஷாந்தன்(வைத்திய கலாநிதி யாழ்.போதனா வைத்தியசாலை), தனுஜியா(முகாமைத்துவ உத்தியோகத்தர்- விவசாயத் திணைக்களம், திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாருணி(விரிவுரையாளர்- யாழ்.பல்கலைக்கழகம்), யோகச்சந்திரா (முகாமையாளர்-கொமர்ஷல் வங்கி, வவுனியா) ஆகியோரின் அருமை மாமனாரும் அபினவ், அகரன், சரன்ஷன், நோஷிதா ஆகியோரின் அன்புப் பேரனாரும் மற்றும் காலஞ்சென்ற சர்வானந்தன்(F.A), அகிலேஸ்வரி(ஓய்வு பெற்ற ஆசிரியை), பிறேமாவதி (ஓய்வு பெற்ற ஆசிரியை) ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ் சென்ற தர்மலிங்கம், அன்னலெட்சுமி (ஓய்வு நிலை ஆசிரியை), கனகலிங்கம்(F.A), சண்முகலிங்கம்(வைத்திய கலாநிதி U.K) ஆகியோரின் மைத்துனரும் பிரியா, ரமேஸ், மிருனாளினி ஆகியோரின் சித்தப்பாவும் மயூரன், சுரேகா, சுவாதிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.10.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 10, கோணாவளை வீதி
(மருத்துவபீடம் முன்பாக),
கொக்குவில். (2354)

தகவல்: குடும்பத்தினர்
077 3640 579
077 9112 953

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 237/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | |
| 1Kg றவை | - 284/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 280/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= | |
| 1Kg சம்பா அரிசி | - 228/= | |
| 1Kg கீரி சம்பா | - 250/= | |
| 1Kg உளுத்தம் பருப்பு | - 785/= | |
| 1Kg பயறு | - 655/= | |
| 1Kg மல்லி | - 380/= | |
| 1Kg சோயா | - 440/= | |
| 10Kg விஜிதா குத்தரிசி | - 2530/= | |
| 750 ml Vsp நல்லெண்ணை | - 1460/= | ~~1550/=~~ |
| 400 g சஸ்ரயன் | - 3500/= | ~~3900/=~~ |
| 180 ml Chik சம்போ | - 420/= | ~~480/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~80/=~~ |

**400g Nestomalt**
729/=



~~780/=~~

**400g Anchor**
1000/=



~~1050/=~~ (451)

இன்று மட்டுமே காலை 9.00 - மாலை 5.00 வரை Nestomalt promotion பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லுங்கள் அனைவருக்கும் பரிசில்கள் உண்டு.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. Happy Supermarket 0777 8080 30

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



21.12.2024 ல் புதுடில்லியில் நடைபெறும் International Award ceremony ல் கணக்கீட்டு பேராசிரியர் (professor) பட்டம் பெற இருக்கும்,

**திரு.அ.கலைச்செல்வன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர் :
**ஆசிரிய நண்பர்கள்** (2367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.